காமகோடி க்ரந்தாவளி—14

மாத்ருகா புஷ்பமாலா ஸ்துதி:

ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் அனுவாதமும்



ஸ்ரீ ஜம்புநாத—அகிலாண்டேச்வரி

समर्पणम्

कावेरीमध्यदेशे महिमजुषि गजारण्यनाम्नि स्थले यः
पञ्चप्राकारमध्ये जलमयभवने तोयलिङ्गात्मनाऽस्ति ।
लूताहस्तीन्द्रसेव्यो ह्यनुदिनमखिलाण्डेश्वरीपूजितोऽसौ
जम्बूवृक्षस्य जम्बूपतिरवतु मुनेर्मस्तकोत्थस्य मूले ॥

श्रीकामकोटिग्रन्थावलिः १४

॥ श्रीः ॥

॥ श्रीचन्द्रमौलीश्वराय नमः ॥

॥ श्री अखिलाण्डेश्वर्यै नमः ॥

श्रीमद् आद्यशङ्करभगवत्पूज्यपादैः विरचिता

॥ श्रीमातृकापुष्पमालास्तुतिः ॥



श्रीकामकोटिर्विजयते

[द्वितीयं संस्करणम्]

श्रीकामकोटि कोशस्थानेन प्रकाशितम्

५७, पश्चिम डबीर् वीथी, कुम्भघोणम्

स्वाम्यं कोशस्थानस्यैव] 1950 [मूल्यम् कलादशकम्

ஸ்ரீ:

ஸ்ரீ சந்த்ரமௌளீஶ்வராய நம:

ஸ்ரீமத் ஆத்ய சங்கர பகவத் பூஜ்ய பாதர்கள்

இயற்றிய

ஸ்ரீ மாத்ருகா புஷ்பமாலா ஸ்துதி:

வியாகரணாலங்கார சிரோமணி

பண்டிட் ஸ்ரீ N. அருணாசல சாஸ்திரி

எழுதிய தமிழ் அனுவாதத்துடனும், குறிப்புடனும்

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய திவ்ய ஸ்ரீமுகத்துடனும்

கூடியது

(இரண்டாம் பதிப்பு)

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் வீதி :: கும்பகோணம்

பதிப்புரிமை] 1950 [விலை அணா [illegible]

॥ श्रीः ॥

मुद्रा

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य

श्रीमच्छङ्करभगवत्पाद प्रतिष्ठित

श्रीकाञ्ची कामकोटिपीठाधीश्वर जगद्गुरु

श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः

क्रियते नारायणस्मृतिः ॥

श्रेयोमार्गेषु शास्त्रसिद्धेष्वनेकेषु भक्तिमार्गस्सर्वाधिकारिसाधारणत्वात् प्रशस्तो नारदादिमहर्षिपरिगृहीतः स्वल्पप्रयत्नसाध्योऽपि मोक्षपर्यन्तफलसाधनतया "अनन्याश्चिन्तयन्तो माम्," "तेषामहं समुद्धर्ता मृत्युसंसारसागरात्" इत्यादिगीतासूद्धुष्यते । तमवलंब्य स्तोत्रादिनेष्टदेवतामाराध्यात्मानं कृतार्थयितुकामान्मन्दाधिकारिणोऽप्युद्दिधीर्षवश्श्रीमद्भगवत्पादा अद्वैततत्परा अपि भक्तिमार्गोपयुक्तानि बहूनि स्तोत्राण्यन्वगृह्णन् ॥

तत्रोभयकावेरीमध्यदेशालङ्कारभूतगजारण्यक्षेत्रविराजमानश्रीमदखिलाण्डेश्वरीवर्णनात्मको मातृकापुष्पमालास्तव एको विशिष्यते । अत्र

मातृकाक्षराणामकारादिक्षकारान्तानां क्रमश एककवर्णयोजनेन पद्या-रंभः, येन च पद्यारंभस्तत्तद्वर्णारब्धपदान्येव तत्तत्पद्यानि प्रास-बद्धान्यपि सुखावबोधपदवाक्यार्थानि सहृदयानां चमत्कृतिविशेष-मादधति । क्वचन केनाद्युपनिषत्प्रसिद्धब्रह्मविद्यास्वरूपतया परत्र वेदानुपजीवितर्कागम्यतया, एकत्र सर्ववेदप्रतिपाद्यतया ऋणत्रयादि-दुरितनिवर्तनपूर्वकचित्तशुद्ध्याधायकतया, अन्यत्र लूतागजेन्द्रादिभ्य-स्तिर्यग्भ्योऽपि मोक्षप्रदानेन स्तोतॄणां कैमुतिकन्यायसिद्धसमीहित-समर्पकतया, अपरत्र डिंभाद्यसुरान्निहत्य विविधान्तरायनिवर्तनेन भक्तानां स्वाराधनौन्मुख्यप्रापकतया, मातृकाक्षरमन्त्रेणाराधयतां यत्फलं तन्मन्त्रघटितैतत्स्तोत्रपठनमात्रेण संसूचिततावदिष्टसंपादकतया च पराशक्तिं वर्णयन्तो भगवत्पादा जीवन्मुक्तानां कविप्रवराणां च चेतांस्यावर्जयन्तस्सर्वेषामप्यधिकारिणामेतत्स्तोत्रपठनोत्साहं संजनयन्ति ॥

एवंविधमिदं स्तोत्रं सर्वोपकाराय देशभाषानुवादसनाथं मुद्राप्य प्रकाशितं पठन्तः शृण्वन्तश्च भक्ताग्रेसराश्श्रीमदखिलाण्डेश्वर्याः प्रसादेन श्रीचन्द्रमौळीश्वरकृपया च श्रेयांसि प्राप्नुवन्त्वित्याशास्महे ॥

विजययात्रास्थानम्
इस्सचूर इत्यपरनामक
कृष्णपुराग्रहारः
तारण सं॰ श्रावणबहुल
नवमी स्थिरवासरः

नारायणस्मृतिः



1909ஆு ஸ்ரீ அகிலாண்டேச்வரீ தேவிக்கு தாடங்க ப்ரதிஷ்டையையும் ஆலய மஹா கும்பாபிஷேகத்தையும் நடத்தி வைத்து பக்தஜனங்களை தேவியின் அனுக்ரஹத்துக்குப் பாத்திரமாக்கிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்வாமிகளின் படம். அப்போது ஸ்ரீ ஆசார்யாளுக்கு வயது பதினைந்து (15). இந்த ஸ்ரீ அகிலாண்டேச்வரீ தேவிக்கு ஆதி பகவத் பாதர்கள் செய்த தாடங்க ப்ரதிஷ்டையையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

ஸ்ரீ:

|| ஸ்ரீமுகம் ||

முத்ரை

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக ஆசார்யரவர்களான ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர்களினால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதீச்வரர்களான ஸ்ரீஜகத் குரு ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ பாதர்களால் நாராயண ஸ்மரணம் செய்யப்படுகிறது.

சாஸ்திர ஸித்தங்களாய் நன்மை பயக்கும் வழிகள் எல்லாவற்றிலும் பக்திமார்க்கம் யாவர்க்கும் பொதுவானதும் சிறந்ததும் நாரதர் முதலிய மஹர்ஷிகளால் கையாளப் பட்டதும் சொற்ப பிரயத்தினத்தால் ஸாத்யமானதும் மோக்ஷம் ஈறாக உள்ள எல்லாப் பயனையும் ஸாதிக்கவல்ல ஸாதனமாக "அநந்யாச் சிந்தயந்தோ மாம்," "தேஷாமஹம் ஸமுத்தர்தா ம்ருத்யு ஸம்ஸாரஸாகராத்" என்கிறபடி கீதோபநிஷத்துக்களில் கூறப்படுகிறது. அதை அநுஸரித்து ஸ்தோத்திரம் முதலானதினால் இஷ்டதேவதையை ஆராதநம் செய்து தன்னை நல்வழிபட விரும்பும் மந்தாதிகாரிகளையும் கரையேற்ற விருப்பமுற்ற ஸ்ரீ பகவத்

பாதர்கள் தாம் அத்வைதப்பற்றுடையவராயினும் பக்தி மார்க்கத்துக்குப் பயன்படுமாறு பல ஸ்தோத்ரங்களை யருளினார்கள்.

அவைகளில், இரண்டு காவிரிகளின் நடுவில் அலங்காரமாயுள்ள கஜாரண்யக்ஷேத்திரத்தில் விளங்கும்ஸ்ரீ அகிலாண்டேச்வரியை வர்ணிப்பதான மாத்ருகாபுஷ்பமாலாஸ்தவம் ஒன்று பெருமை வாய்ந்தது. இதில் க முதல் க்ஷ முடிவான மாத்ருகாக்ஷரங்களில் ஒவ்வொரு அக்ஷரத்தையும் முதலெழுத்தாகக்கொண்டது ஒவ்வொரு ச்லோகமும். அப்படி அக்ஷரங்களைக்கொண்ட ஆரம்பத்துடன் அவ்வக்ஷராதியான பல பதங்களைக்கொண்டு ப்ராஸத்துடன் முடிக்கப்பட்டும் எளிதில் பொருள்படுபவையுமான ச்லோகங்கள், ஸஹ்ருதயரானவர்களுக்கு மனக்களிப்பை அளிக்கின்றன.

சில விடங்களில் கேந முதலிய உபநிஷத்துக்களில் ப்ரஸித்திபெற்ற ப்ரஹ்மவித்யையின் ஸ்வரூபமாயிருக்கையாலும், மற்றும் சில இடங்களில் வேதானுபஜீவியான தர்க்கத்தினால் விளங்காமையினாலும், ஒரோரிடங்களில் எல்லா வேதங்களாலும் ப்ரதிபாதிக்கத் தகுந்ததாகையால் ருணத்ரயம் முதலிய பாபத்தை யகற்றி மனத்தெளிவை யளிப்பதாகையாலும், மற்ற இடங்களில் சிலந்தி, கஜேந்திரன் முதலிய திர்யக்குக்களுக்கும் மோக்ஷமளிக்கையில் ஸ்தோத்திரம் செய்பவர்களுக்குக் கேட்பானேன் என்றகைமுதிகந்யாயப்படி விரும்பப்பட்ட பலத்தைக் கொடுப்பதாகையாலும், இன்னு மோரோரிடங்களில் டிம்பன் முத

வியாஸுரர்களைக் கொன்று பலபல இடையூறுகளையும் நீக்கி பக்தர்களுக்குத் தன்னை ஆராதிப்பதில் ஊக்கத்தை விளைப்பதாகையாலும், மாத்ருகாக்ஷர மந்த்ரத்தினால் ஆராதனம் செய்பவர்களுக்கு என்னென்ன பயனோ அவ்வோபயனை அந்த மந்த்ராக்ஷரங்களைக் கொண்ட இந்த ஸ்தோத்திரத்தைப் படிப்பதனாலேயே கொடுக்க வல்லதாகையாலும், பராசக்தியை வர்ணிக்கும் பகவத்பாதர்கள் ஜீவன் முக்தர்களுடையவும் சிறந்த கவிகளுடையவும் மனதைக் கவரச்செய்துகொண்டு எல்லா அதிகாரிகளும் இந்த ஸ்தோத்திரத்தைப் படித்துவருமாறு உத்ஸாஹத்தை உண்டுபண்ணுகிறார்கள்.

இவ்விதமானதும் யாவர்க்கும் பயன்படுமாறு தேச பாஷையில் அநுவாதத்தோடு அச்சிட்டு வெளியிடப் பெற்றதுமான இத்தோத்திரத்தைப் படிப்பவர்களும், படிக்கக் கேட்பவர்களுமான சிறந்த பக்தர்கள் ஸ்ரீமத் அகிலாண்டேச்வரியின் அநுக்ரஹத்தாலும் ஸ்ரீ சந்திர மௌளீச்வரரருளாலும் நன்மைகளையடையும் வண்ணம் ஆசீர்வாதம் பண்ணுகிறோம்.

விஜயயாத்ராஸ்தானம் இசயனூர் என்கிற கிருஷ்ண- புராக்ரஹாரம். தாரணவர்ஷம் ச்ராவண பகுள நவமீ சனிக்கிழமை. 12-8-1944.	}	நாராயண ஸ்ம்ருதி

முன்னுரை

அன்புடையீர்!

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்தே நமது பாரத தேசம் பல துறைகளிலும் முன்னணியில் இருந்து வந்துளது. எண்ணிறந்த முனிவர்கள் தங்களது கூறிய அறிவின் திறனால் பற்பல சாத்திரங்களை, சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்ற முறையில், சூத்திர ரூபமாக இயற்றியுள்ளனர். எல்லா சாத்திரங்களும், காமசாத்திரம் உள்பட, மறைமுகமாகவோ நேரடியாகவோ தெய்விகக் கொள்கையை படிப்போர் மனதில் பதிய வைக்கின்றன. ஈசனை யடையும் வழியை, ஈசனுகப் பொலியும் மார்க்கத்தைச் சீரியமுறையில் போதிக்கின்றன.

பிறப்பு, மூப்பு, சாக்காடுகளாகும் பெரும் புயலில் அகப்பட்டுக் கலங்கும் மானுடவர்க்கம் மானுடம் நீத்து அமரத்தன்மை பெறுவதற்கான வழிகள் பல பண்டை நூல்களிலிருந்து அறியக் கிடக்கின்றன. கர்மமார்க்கம், பக்திமார்க்கம், யோகமார்க்கம், ஞானமார்க்கம் எனப் பல திறப்பட்ட எல்லா வழிகளும், பலவாறு ஓடும் ஆறுகள் கடைசியில் கடலோடு கலப்பதுபோல, ஈசனையே அடைகின்றன என்பது மூதறிவாளர்களின் சிதையாத துணிபு.

பலவகைப்பட்ட வழிகளிலும், பக்திமார்க்கமே : அஃதாவது அன்புவழியே பாமரர்களையும், பண்டிதர்களையும் ஒருமிக்க கடைத் தேற்றும் சிறந்த மார்க்கமாக விளங்குகிறது. நாரதர் முதலாய் தெய்விக முனிவர்கள் போதித்தது பக்திமார்க்கம். சமீபகாலங்களில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் தங்களது தேவாரத் திருவாய்

மொழிகளால் மக்களின் மனத்தில் தெய்வபக்தி ஊற்றெடுக்கச் செய்த விஷயம் வெள்ளிடைமலை.

இத்தகைய சீர்வாய்ந்த அன்பு வழியை ஆதி சங்கர பகவத் பாதரவர்களும் பாமரர்களின் பொருட்டு உபதேசித்தனர். "காணப்படும் உலகம் பொய்; ப்ரஹ்மம் ஒன்றே மெய்; ஜீவன் பிரஹ்மமே; வேறல்ல" என்ற உண்மையைத் தனது பாஷ்யங்களில் நிலை நிறுத்திய பகவத் பாதர்கள் அத்வைத சிகரத்தினின்று பக்திமார்க்கமாகும் தாழ்வரைக்கு இறங்கிவந்து துதிரூபமான எண்ணற்ற நூல்களை ஆத்தனர். சிறந்த ஆசானொருவன் தனது சீடர்களின் பக்குவம் அறிந்து அவரவர்க்குத் தக்க முறையில் உபதேசிப்பானன்றோ! இம்முறையில், பாமரர்களை உய்விக்கும் வகையில் சமைக்கப்பட்ட நூல்களில் தற்போது வெளிவரும் மாத்ருகாபுஷ்பமாலா ஸ்துதி தலைசிறந்து ஒளிர்கிறது.

இந்நூல் திருவானைக்கா என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் அகிலாண்ட நாயகி அம்மையைப் பற்றியது. திருவானைக்காவிலுறையும் ஈசனார் அப்புலிங்கம் என்றும் ஜம்புகேச்வரர் என்றும் பெயரினர். ஐம்பூதங்களிலொன்றான அப்பு (ஜல) ரூபமாக இருப்பதால் அப்புலிங்கமென்றும், தலவிருட்சம் ஜம்பு (நாவல்) ஆனதால் ஜம்புகேச்வரர் என்றும் காரணப் பெயர்களாம். விரித்துரைக்க இங்கு இடமின்மையால் விசேஷமாய் அறிய விரும்புவோர் திருவானைக்காத் தலபுராணங் கண்டு தெளிக.

பரப்ரஹ்மஸ்வரூபிணியும், ப்ரஹ்மவித்யாரூபிணியுமான பரதேவதை காஞ்சீ க்ஷேத்ரத்தில் காமாக்ஷீ என்ற

பெயருடன் மஹாராஜ்ஞீ அல்லது ராஜராஜேச்வரியாகவும், அப்படியே திருவாலவாய்த் திருநகரியில் மீனாக்ஷீ என்ற திருநாமம் பூண்டு மந்த்ரிணீ அல்லது சியாமளாவாகவும், திருவானைக்கா என்ற புனிதமான திருத்தலத்தில் அகிலாண்டநாயகி என்ற சீரிய அபிதானந்தாங்கி தண்டினீ அல்லது தண்டநாதையாகவும் வீற்றிருந்து அன்பர்குழாத்திற்கு அருள்புரியும் விஷயம் மந்திரசாத்திர வல்லுநர்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்ததொன்றன்றோ! ஆகவே, செங்கோல் தாங்கி, அகில அண்டங்களுக்கும் தலைவியாய் வீற்றிருக்கும் வாக் ரூபிணியான தண்டினீ தேவதையை உள்ளன்புடன் பூசிப்பவர்கட்கு எளிதில் கைகூடாத மக்கட்பேறும் உண்டோ!

காமாக்ஷியைப்பற்றிய மூகபஞ்சசதியும், மீனாக்ஷியைப் பற்றிய ஆனந்தஸாகரஸ்தவமும் முன்பே உரையுடன் வெளியாகிவிட்டன. தற்பொழுது, ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான நமது ஆசார்யேந்திரர்களின் அனுக்ரஹத்தை முன்னிட்டு, அகிலாண்டநாயகியைப் பற்றிய நூல் வெளிவருகிறது. உரையுடன் வெளிவரும் இந்நூலில் அவ்வகிலாண்ட நாயகியை வடமொழி நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களின் வரிசையில் ஐம்பதுக்கு மேற்பட்ட சுலோகங்களில் மனதைக் கொள்ளை கொள்ளும் முறையில் வர்ணித்திருக்கிறார் பகவத்பாதர்கள். ஒவ்வொரு செய்யுளும் கிரமப்படி ஒவ்வோர் எழுத்தில் துவங்குவதோடல்லாமல், ஒரு செய்யுளிலுள்ள வரிகள் யாவுமே, ஓரே எழுத்தில் ஆரம்பிக்கின்றதைக் கவனிக்கும் அறிவாளிகள் களிபேருவகை எய்துவர். இந்நூலில் இலைமறை காய்மறைவாக, ஆங்காங்கு, மந்திர சாஸ்திர

நுட்பங்களும், தலபுராண உண்மைகளும் பொதிந்து கிடப்பதோடல்லாமல், சொல்லழகு, பொருளழகு, அணி யழகு, யாப்பழகு ஆகிய யாவும் ஒருங்குசேர்ந்து மிளிர் கின்றன.

நெடுங்கணக்கு வரிசையில் செய்யுட்களை அமைத்த தன் பெருமைதான் என்ன? அதனால் கிடைக்கும் பயன் தான் யாதானும் உண்டோ? என்ற ஐயப் பாடுகள் படிப் போர் மனத்தில் தோன்றக்கூடும்; சொல்வாம்: நமது அறிவுக்கெட்டாப் பண்டை நாளில் ஸனகாதி முனிவர் களை உய்விக்கும்பொருட்டு, உமையொருபாகரான பரம சிவனார் திருநடம்புரிந்து அதனிறுதியில் தனது திருக் கரத்திலமைந்த உடுக்கையை பதினான்குமுறை ஒலித்தார். அதனின்று பதினான்கு சூத்திரங்கள் தோன்றின. அவை களைக்கொண்டே வடமொழி இலக்கணத்தை ஒப்பற்ற முறையில் அமைத்தார் நுண்ணறிவாளரான பாணினியார். அச்சூத்திரங்கள் கூறும் பொருள்தான் என்ன, என்பி ரேல், அவைதாம் வடமொழி நெடுங்கணக்கைச் சுருங்கிய சாஸ்திரீய முறையில் தருகின்றன. ஆகவே எழுத்துக் களைச் சிவன் தந்தாரெனில் சக்தியின் உதவியின்றி அவர் எவ்வாறு வெளிப்படுத்தமுடியும்? எவ்வாறு திருநடம் புரிய இயலும்? சக்தியில்லையேல் சிவம் இயங்குதற் கும் அரிதாம். ஆகவே சக்தியிடமிருந்து தோன்றிய எழுத்துக்கள் சக்தியினின்றும் வேறல்ல; சர்க்கரையி னின்றுமாக்கிய பண்டங்கள் சர்க்கரையினின்றும் வேறாகா தன்றோ! இவ்வுண்மையினாலேயே லலிதாஸஹஸ்ரநாமம் முதலிய நூல்கள் பரதேவதையை "மாத்ருகாவர்ண ரூபிணீ" எனப் போற்றுகின்றன. மேலும், ஈசனால்

நமக்கு அளிக்கப்பட்ட சரீரத்தையும் உறுப்புக்களையும் ஈசனார் பணிக்கே அர்ப்பிக்க வேண்டுமன்றோ! ஈசனார் படைத்த தூயநறுமணங்கமழும் மலர்களைக்கொண்டு நாம் ஈசனாரைப் பூசிக்கின்றோமல்லவா? அதுபோலவே பராசக்தியினின்றும் வேறல்லாத பரசிவன் தந்த எழுத்துக்களைக்கொண்டு ஸகல தேவர்களுக்கும் தேவதையான, எல்லா உலகிற்கும் தலைவியான, செங்கோல் தாங்கி அகில அண்டங்களையும் தன்னிச்சைப்படி நிறுத்துபவளான, தண்டினீதேவியை ஸ்ரீமத் அகிலாண்டேஶ்வரியை, மாத்ருகாக்ஷரங்களைக் கொண்டு துதிப்பது முற்றிலும் பொருத்தமேயாம். அதனால் அன்பர் குழாம்பெறும் பயனும் எண்ணிலடங்காது.

இத்துணை சிறப்பு வாய்ந்த இந்நூல் முதன்முதலாக தமிழ் உரையுடன் வெளிப்படுத்தப்படுகிறது. பல அச்சுப் பிரதிகளையும், ஏட்டுப் பிரதிகளையும் துணை கொண்டு பல சீர்திருத்தங்களுடன் இது வெளிவருவதாயினும், பூரண வெற்றி பெற்றுவிட்டதாக நாம் தேறவில்லை. இதனினும் சிறந்த பாடங்களோ, அல்லது வேறு சிறந்த உரைகளோ பேரறிவாளிகளால் தெரிவிக்கப்படுமாயின் வணக்கத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு அடுத்தமுறை அச்சிடுங்காலை மிக்க சிறந்த முறையில் வெளிவரும் என்று எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த ஏது மறிந்த சிதாநந்த ரூபிணியான அகிலாண்டகோடி நாயகியைப் பிரார்த்தித்துக் கொண்டு இந்நூலை ஸ்ரீமத் ஆசார்யேந்திரர்களின் திருவடித் தாமரைகளில் பக்தி விநயங்களுடன் ஸமர்ப்பிக்கிறேன்.

இப்படிக்கு
ஸஜ்ஜனவிதேயன்

லால்குடி,
திருச்சிறைப்பள்ளி ஜில்லா.

N. அருணசல சாஸ்திரி
வியாகரணாலங்கார சிரோமணி

॥ श्रीमदखिलाण्डेश्वर्यै नमः ॥

॥ श्रीमातृकापुष्पमालास्तुतिः ॥

ஸ்ரீமாத்ருகாபுஷ்பமாலா ஸ்துதி:

अध्वातीतपदे अलंकृतशिवे अर्थान्तरर्थेऽपरे
अत्यर्थे अमलाशये अतिदये अर्धेन्दुभूषोज्ज्वले ।
अध्यक्षे अमराङ्गनापरिवृते अध्यात्मविद्यामये
अव्यक्ते अचलाधिराजतनये वन्देऽखिलाण्डेश्वरि ॥ १ ॥

அத்வாதீதபதே அலங்க்ருதஸிவே
அர்தாந்தரார்தேऽபரே
அத்யர்தே அமலாஶயே அதிதயே
அர்தேந்துபூஷோஜ்ஜ்வலே |
அத்யக்ஷே அமராங்கனாபரிவ்ருதே
அத்யாத்மவித்யாமயே
அவ்யக்தே அசலாதிராஜதனயே
வந்தேऽகிலாண்டேஶ்வரி || 1 ||

अध्वातीतपदे (ஆகம ப்ரஸித்தமான வர்ணம், பதம், புவனம், தத்வம், கலை, மந்த்ரம்) என்று ஆறு அத்வாக்களுக்கும் மேற்பட்ட நிலையுள்ளவளே **अलंकृत शिवे** சிவனை யழகுபடுத்துபவளே **अर्थान्तरर्थे** எல்லா பதார்த்தங்களுக்கு மந்தர்யாமியான பதார்த்தமாக இருப்பவளே **अपरे** தன்னிலும் உயரிய பொருளற்றவளே **अत्यर्थे** எல்லா உலகம் என்ற பதார்த்தத்தை மீறி இருப்பவளே **अमलाशये** மாசற்ற ஹிருதய முடையவளே **अतिदये** அதிக தயவுள்ளவளே

अर्धेन्दुभूषोज्ज्वले பாதி சந்திரனாகிய ஆபரணத்தால் பிரகாசிட்டவளே अध्यक्षे தலைமை வஹிப்பவளே अमराङ्गनापरिवृते தேவ ஸ்திரீகளால் சூழப்பட்டவளே अध्यात्मविद्यामये பிரும்மவித்யா ரூபிணியே अव्यक्ते புலப் படாதவளே अचलाधिराज तनये மலையரசன் மகளே अखिलाण्डेश्वरि (எல்லா உலகங்களுக்கும் யஜமானியே) அகிலாண்டேச்வரியே (त्वां உம்மை) वन्दे நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை:—ஆகம ப்ரஸித்தமான அறுவகை அத்துவாக்களையும் கடந்த நிலையிலுள்ளவளும், சிவனுரை அணி செய்பவளும், எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கும் ஒரு (பரம்) பொருளும், தன்னிலும் உயர்ந்த ஓர் பொருளற்றவளும், உலகம் முதலாய பொருள்களுக்கு அப்பாலிருப்பவளும், மாசற்ற மனத்தினளும், தண்ணளி நிறைந்தவளும், அரைத் திங்களாகிய அணியால் ஒளிருபவளும், (சகல தேவர்களுக்கும்) தலைமை வகிப்பவளும் தெய்வ மங்கையரால் சூழப்பட்டவளும், பிரும்மவித்யா ரூபிணியும், (யோகியர் முதலானவர்களுக்கும்) தெள்ளப் புலப் படாதவளும், மலையரசன் மகளும், அகில அண்டங்களுக்கும் அரசியு (தலைவியு)மான உன்னை வணங்குகிறேன்.

குறிப்பு :—(1) வர்ணம், பதம், புவனம், தத்வம், கலை, மந்த்ரம் ஆகிய ஆறும் அத்துவாக்கள் (வழிகள்) (2) उमां हैमवतीं என கேனோபநிஷத்தில் இத்திரனால் அறியப்பட்ட பிரும்ம வித்தை இங்கு अचलाधिराज-तनये, अध्यात्मविद्यामये ஆகிய சொற்களால் குறிக்கப்பட்டது.

आद्ये आगमसंप्रदायनिपुणे आचार्यवर्यार्चिते
आधारादिसरोजपीठनिलये आलोलनीलालके ।

आताम्राधरचारुमन्दहसिते आपीनवक्षोरुहे
आब्रह्माच्युतशङ्करार्चितपदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ २ ॥

ஆத்யே ஆகமஸம்ப்ரதாயநிபுணே ஆசார்யவர்யார்சிதே
ஆதாராதிஸரோஜபீடநிலயே ஆலோலநீலாலகே |
ஆதாம்ராதரசாருமந்தஹஸிதே ஆபீநவக்ஷோருஹே
ஆப்ரஹ்மாச்யுத ஶங்கரார்சிதபதே வந்தேऽகிலாண்-
டேஶ்வரி ॥ 2 ॥

आद्ये முதல்வளே! **आगमसंप्रदायनिपुणे** ஆகம ஸம்ப்ரதாயங்களில், தேர்ந்தவளே **आचार्यवर्यार्चिते** சிறந்தவர்களான ஜகத் குருக்களால் பூஜிக்கப்பட்டவளே **आधारादिसरोजपीठनिलये** ஆதாரம் முதலிய ஆறு தாமரைப் பீடங்களை இருப்பிடமாகக் கொண்டவளே **आलोलनीलालके** அசைகின்ற கருத்த கூந்தலுள்ளவளே **आताम्राधरचारु-मन्दहसिते** சிவந்த கீழ் உதட்டில் பரவு மழகிய புன்சிரிப்புள்ளவளே **आपीनवक्षोरुहे** பருத்த ஸ்தனமுள்ளவளே **आब्रह्माच्युतशङ्करार्चितपदे** பிரமன், விஷ்ணு, சங்கரன் முதலாக உள்ள உலகத்தால் பூஜிக்கப்பெற்ற திருவடியை உடையவளே **अखिलाण्डेश्वरि** அகிலாண்டேச்வரியே **वन्दे** நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :—(சகலத்துக்கும்) முதலாய் இருப்பவளும், ஆகம ஸம்ப்ரதாயங்களில் தேர்ந்தவளும், சீரிய ஜகத்குருக்களால் பூஜிக்கப்பட்டவளும், மூலாதாரம் முதலிய தாமரை இருக்கைகளில் அமர்ந்தவளும், அசைகின்ற கருங்குழலையுடையாளும், மிகச் சிவந்த கீழ் உதட்டில் பரவிய அழகாய புன்சிரிப்பினளும், பருத்த கொங்கைகள் பெற்றாளும், அயன், மால், அரன் முதலானவர்களால்

பூசிக்கப்பட்ட திருவடியினளும் அகில அண்டங்களுக்கும் தலைவியுமான உன்னை வணங்குகிறேன்.

குறிப்பு:—மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரம், அனாஹதம், விசுத்தி, ஆஜ்ஞை, ஸஹஸ்ராரம் ஆகியதாமரைப்பீடங்களில் தேவி வீற்றிருக்கும் விஷயம் லலிதா ஸஹஸ்ரநாமம் **विशुद्धिचक्रनिलया** என்ற நாமம் முதற்கொண்டு **याकिन्यम्बास्वरूपिणी** என்ற நாமம் முடிய உள்ள அறுபது நாமாக்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

इच्छाज्ञानसमस्तशक्तिसहिते इन्दीवरश्यामले
इन्द्रोपेन्द्रवरप्रदे इभवनाधीशे इनाराधिते ।
इज्ये इन्दुनिभानने इभनुते इष्टार्थसिद्धिप्रदे
इन्द्राणीनमिते इभाननसुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ ३ ॥

இச்சாஜ்ஞான ஸமஸ்தஶக்திஸஹிதே
 இந்தீவரஶ்யாமலே
இந்த்ரோபேந்த்ரவரப்ரதே
 இபவநாதீஶே இநாராதிதே |
இஜ்யே இந்துநிபாநநே
 இபநுதே இஷ்டார்தஸித்திப்ரதே
இந்த்ராணீநமிதே இபாநநஸுதே
 வந்தேऽகிலாண்டேஶ்வரி || 3 ||

इच्छाज्ञानसमस्तशक्तिसहिते இச்சா சக்தி ஞானசக்தியோடு கூடிய கிரியா சக்தியோடு கூடியவளே **इन्दीवरश्यामले** கருந்தாமரைபோல் கருத்த நிறமுள்ளவளே **इन्द्रोपेन्द्रवरप्रदे** இந்திரனுக்கும் உபேந்திரனுக்கும் வரங்களை யளிப்பவளே **इभवनाधीशे** கஜாரண்யத்திற்கு யஜமானியே **इनाराधिते** சூரிய

னால் பூஜிக்கப்பெற்றவளே इज्ये யாக ஸ்வரூபிணி इन्दुनिभानने சந்திரனுக்கொப்பான முகமுள்ளவளே इभनुते யானையால் துதிக்கப்பட்டவளே इष्टार्थसिद्धिप्रदे விரும்பிய பொருள்களைக் கைகூடும்படி செய்பவளே इन्द्राणीनमिते இந்திரன் மனைவியால் வணங்கப்பட்டவளே इभाननसुते கஜமுகனைப் புதல்வனாகக் கொண்டவளே, அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :—இச்சை, ஞானம், கிரியை ஆகிய சக்திகளோடு கூடியவளும், கருந்தாமரையெனக் கருநிறத்தினளும், இந்திரனுக்கும், உபேந்திரனாகிய வாமனனுக்கும் வரமளித்தவளும், கஜாரண்ய (ஜம்புகேச்வர) க்ஷேத்ர நாயகியும், சூரியனால் பூஜிக்கப்பட்டவளும் யஜ்ஞ ரூபிணியும், திங்களெனப் பொலியும் திருமுகத்தினளும், யானையால் துதிக்கப்பட்டவளும், விரும்பிய பொருள்களை கைகூடச் செய்பவளும் இந்திராணியால் வணங்கப்பட்டவளும், யானைமுகத்தினனைப் பிள்ளையாகக் கொண்டவளுமான உன்னை வணங்குகின்றேனே, அகிலாண்டேச்வரீ!

குறிப்பு :—இந்திரன், இந்திராணி, உபேந்திரன், சூரியன், யானை ஆகியோர் தேவியினருள் பெற்றது திருவானைக்கா தல புராணத்தினின்று நன்கு அறியக் கிடக்கின்றது.

ईशे ईशविरिञ्चिशौरिवरदे ईड्यालि ईशात्मिके
ईर्ष्यादूषितचित्तदूरचरणे ईशप्रिये ईश्वरि ।
ईड्ये ईश्वरवामभागनिलये ईकारवल्लसोदये
ईशित्वादिमहाविभूतिनिलये वन्देऽखिलाण्डेश्वरि ॥ ४ ॥

ஈசே ஈசவிரிஞ்சிசௌரிவரதே ஈட்யாலி ஈசாத்மிகே
ஈர்ஷ்யாதூஷிதசித்ததூரசரணே ஈசப்ரியே ஈச்வரி |
ஈட்யே ஈச்வரவாமபாகநிலயே ஈங்காரக்லுப்தோதயே
ஈசித்வாதிமஹாவிபூதிநிலயே வந்தேऽகிலாண்டேச்வரி ||7

ईशे யஜமானியே **ईशविरिञ्चिशौरिवरदे** சிவன், பிரமன் விஷ்ணு இவர்களுக்கு வரங்களை யளிப்பவளே **ईड्यालि** துதிக்கத் தகுந்த தோழிகளை யுடையவளே **ईशात्मिके** பரசிவ ஸ்வரூபிணியே **ईर्ष्यादूषितचित्तदूरचरणे** பொறாமையால் கெட்ட மனமுள்ளவர்களுக் கெட்டாத திருவடியை யுடையவளே **ईशप्रिये** சிவனது காதலி **ईश्वरि** ஆட்சியுள்ளவளே **ईड्ये** துதிக்கத் தகுந்தவளே **ईश्वरवामभागनिलये** சிவனது இடது பாகத்தை இருப்பிடமாகக் கொண்டவளே **ईङ्कारक्लृप्तोदये** ஈங்காரத்தில் தோன்றுகின்றவளே **ईशित्वादिमहाविभूतिनिलये** ஈசித்வம் முதலிய எட்டு விபூதிகளுக்கு மிருப்பிடமானவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :—எல்லாவற்றிற்கும் தலைவியே! அரன் அயன் மால் ஆகியோர்க்கும் வரமளிப்பவளே! துதிக்கத் தக்க தோழிகளுடன் கூடியவளும், பரசிவ ஸ்வரூபிணியும், பொறாமையால் மாசுற்ற மனத்தினருக்கு எட்டாத திருவடிகளை யுடையவளும், சிவனார் காதலியும், (ஸகல உலகையும்) ஆட்சி செய்பவளும், துதிக்கத் தகுந்தவளும், சிவனது இடப்பாகத்தை இருப்பிடமாகக் கொண்டவளும் ஈங்காரத்தில் தவறாத் தோற்றமுடையவளும், ஈசித்வம் முதலாய சிறந்த விபூதிகளுக்கு இருக்கையும் ஆன உன்னை வணங்குகிறேன், ஏ, அகிலாண்ட நாயகியே!

குறிப்பு—(i) ஆவரண தேவதைகளே, ஈண்டு (ईड्यालि) தோழிகளாகக் கூறப்பட்டனர். (ii) அணிமா, மஹிமா, கரிமா, லகிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஈசித்வம், வசித்வம் ஆகிய எட்டும் மஹா விபூதிகளாம்.

उद्यद्भानुसहस्रकोटिकिरणे उर्वीधरेन्द्रात्मजे
उत्फुल्लाम्बुजलोचने उभयकावेर्यन्तरालाश्रये ।
उद्यच्चन्द्रनिभानने उरुतरे उच्चासने उज्ज्वले
उद्दामद्युतिपुञ्जमञ्जुलतरे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ५ ॥

உத்யத்பாநுஸஹஸ்ரகோடிகிரணே
உர்வீதரேந்த்ராத்மஜே
உத்புல்லாம்புஜலோசனே
உபயகாவேர்யந்தராலாஶ்ரயே |
உத்யச்சந்த்ரநிபானனே உருதரே
உச்சாஸனே உஜ்ஜ்வலே
உத்தாமத்யுதிபுஞ்ஜமஞ்ஜுலதரே
வந்தேऽகிலாண்டேஶ்வரி || ௫ ||

उद्यद्भानुसहस्रकोटिकिरणे இளம்பிய ஆயிரங்கோடி ஸூர்யர்களுக் கொப்பான கிரணங்கள் உள்ளவளே **उर्वीधरेन्द्रात्मजे** மலையரசன் மகளே **उत्फुल्लाम्बुजलोचने** மலர்ந்த தாமரை போன்ற கண்களையுடையவளே **उभयकावेर्यन्तरालाश्रये** இரண்டு காவேரிக்கும் நடுபாகத்தை இருப்பிடமாகக் கொண்டவளே **उद्यच्चन्द्रनिभानने** கிளம்பிய சந்திரனுக் கொப்பான முகமுள்ளவளே **उरुतरे** மிகச் சிறந்தவளே **उच्चासने** உயர்ந்த பீடத்திலிருப்பவளே **उज्ज्वले** பிரகாசிப்பவளே **उद्दामद्युतिपुञ्जमञ्जुलतरे** கட்டுக் கடங்காத ஒளிக்

கூட்டத்தால் மனதைக் கவருகின்றவளே, அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை :—ஆயிரம் கோடி சூர்யர்கள் உதித்தாற் போல் ஒளிருபவளே! மலையரசன் மகளே! மலர்ந்த தாமரை போன்ற கண்களை யுடையாளே! இரு காவிரிக்கும் இடையில் இருக்கை கொண்டாளே! உதயகாலத் திங்களைப் பொலியும் முகத்தினளே! மிகச் சிறப்புற்றவளே! உயரிய பீடத்தில் விளங்குபவளே! ஓங்கி ஒளிரும் ஒளிக் கூட்டத்தால் மிக்க இனியவளே! அகிலாண்ட நாயகி! உனக்கு வணக்கம்.

குறிப்பு :—இச்செய்யுளில் **न तत्र सूर्यो भाति न चन्द्रतारकम् नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः......तस्य भासा सर्वमिदं विभाति** ॥ என்ற உபநிடதப் பொருள் குறிக்கப்படுகிறது.

ऊहापोहविवेकबाह्यनिलये ऊनातिरिक्तोज्ज्वले
ऊर्जस्वन्मणिमेखलाविलसिते ऊरीकृतार्थप्रिये ।
ऊर्ध्वाधोद्भवयोगमूलनिलये ऊष्मापहारोज्ज्वले
ऊधःक्षीरसुधाधृतत्रिभुवने वन्देऽखिलाण्डेश्वरि ॥ ६ ॥

ஊஹாபோஹவிவேகபாஹ்யநிலயே
ஊநாதிரிக்தோஜ்ஜ்வலே
ஊர்ஜஸ்வந்மணிமேகலாவிலஸிதே
ஊரீக்ருதார்த்தப்ரியே |
ஊர்த்வாதோத்பவயோகமூலநிலயே
ஊஷ்மாபஹாரோஜ்ஜ்வலே
ஊத:க்ஷீரஸுதாத்ருதத்ரிபுவனே
வந்தேऽகிலாண்டேச்வரி || 6 ||

ऊहापोहविवेकबाह्यनिलये ஊஹ அபோஹ ரூபமான தர்க்கத்திற்கு எட்டாத நிலையுள்ளவளே **ऊनातिरिक्तोज्ज्वले** தாழ்ந்த சிறந்த எல்லாப் பிராணிகளிலும் விளங்குபவளே **ऊर्जस्वन्मणिमेखलाविलसिते** பருத்த ரத்னங்களுள்ள மேகலையால் (அறு நூல் மாலை) விளங்குபவளே **ऊरीकृतार्थप्रिये** தத்வார்த்த நிச்சயமுள்ளவரிடம் அன்புள்ளவளே **ऊर्ध्वाधोद्वययोगमूलनिलये** ஊர்த்வ யோக அதோ யோகங்களுக்குக் காரணமான நிலையுள்ளவளே **ऊष्मापहारोज्ज्वले** மூன்றுவித தாபத்தைப் போக்கி விளங்குபவளே **ऊधःक्षीर-सुधाधुतत्रिभुवने** மடியிலுள்ள பாலாகிய அமுதத்தால் மூவ்வுலகையும் தாங்குபவளே (காமதேனு ரூபமாயிருப்பவளே) அகிலாண்டேச்வரி உன்னை நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை :—ஊஹம், அபோஹம் என்ற தர்க்கத்துக் கெட்டாதவளும், தாழ்ந்தவற்றிலும் சிறந்தவற்றிலும் விளங்குபவளும், பருத்த ரத்னங்களுள்ள மேகலையால் பொலிவு பெற்றவளும், தத்வ நிச்சயமுள்ளவரிடம் அன்புள்ளவளும், ஊர்த்வ அதோ யோகங்களுக்குக் காரணமாயுள்ள நிலையுடையாளும், மூவித தாபங்களைத் தவிர்ப்பவளும், காமதேனுவாக விளங்கித் தனது மடியிலுள்ள பால் என்ற அமுதத்தை யூட்டி மூவுலகையும் தாங்குபவளுமான அகிலாண்ட நாயகியை வணங்குகிறேன்.

குறிப்பு :—(i) ஆத்யாத்மிகம், ஆதி பௌதிகம், ஆதி தைவிகம் எனத் தாபங்கள் மூவகையின. (ii) **नैषा तर्केण मतिरापनेया** என்ற மறைப்பொருள் காண்க.

ऋग्वेदादिनिषेविते ऋतुनते ऋद्धानुकम्पावहे
ऋद्धामोदमुखेप्सिते ऋतुनुते ऋक्षौघसंसेविते ।

ऋक्षाधीशकलान्विते ऋणतमोभास्वत्पदाम्भोरुहे
ऋद्ध्यापूरितविष्टपत्रयनुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ ७ ॥

ருக்வேதாதிநிஷேவிதே ருதுநதே
ருத்த்யாநுகம்பாவஹே
ருத்த்யாமோதமுகேப்ஸிதே ருதுநுதே
ருக்ஷௌகஸம்ஸேவிதே |
ருக்ஷாதீசகலாந்விதே
ருணதமோபாஸ்வத்பதாம்போருஹே
ருத்த்யாபூரிதவிஷ்டபத்ரயநுதே
வந்தேऽகிலாண்டேச்வரி ‖ 7 ‖

ऋग्वेदादिनिषेविते ருக்வேதம் முதலியவற்றால் ஸேவிக்கப்பட்டவளே **ऋतुनते** வஸந்தன் முதலிய ஆறு ருதுக்களால் வணங்கப்பெற்றவளே **ऋद्ध्यनुकम्पावहे** அதிக தயை காட்டுகின்றவளே **ऋद्ध्यामोदमुखे** வாசனை நிறைந்த வாயையுடையவளே **ईप्सिते** விரும்பப்பட்டவளே **ऋतुनुते** வசந்தம், சரத் முதலிய ருதுக்களில் விசேஷமாகப் பூஜிக்கப்படுகின்றவளே **ऋक्षौघसंसेविते** ஸப்த ரிஷி மண்டலத்தால் ஸேவிக்கப்பட்டவளே **ऋक्षाधीशकलान्विते** சந்திர கலையோடு கூடியவளே **ऋणतमोभास्वत्पदांभोरुहे** மூன்று கடன்கள் (பித்ரு தேவ ருஷிக் கடன்கள்) ஆகிற இருட்டுக்குச் சூரியனை திருவடித் தாமரையை யுடையவளே (மூன்று கடன்களைப் போக்குபவளே) **ऋद्ध्यापूरितविष्टपत्रयनुते** செல்வம் நிறைந்த மூன்றுலகாலும் துதிக்கப்பட்டவளே, அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—ருக்வேதம் முதலியவைகளால் ஸேவிக்கப்பட்டவளும், வஸந்தன் முதலிய ருதுக்களால்

வணங்கப்பட்டவளும், மிகுந்த தண்ணளி சுரக்கின்ற வளும், மணம் கமழும் திருவாயைப் பெற்றவளும், விரும் பப்பட்டவளும், வஸந்தம், சரத் முதலிய ருதுக்களில் விசேஷமாய் பூஜிக்கப்படுகிறவளும், ஸப்த ரிஷி மண்டலத் தால் அர்ச்சிக்கப்படுபவளும், சந்திர கலையைத் தரித்த வளும், தன் திருவடிகளை வணங்கும் அன்பர் குழாத்தின் மூவிதக் கடன்களையும் தொலைப்பவளும், செல்வத்தால் நிறைந்த மூவுலகத்தினராலும் துதிக்கப்பட்டவளுமாகிய ஏ அகிலாண்டேச்வரீ, உன்னை வணங்குகிறேன்.

குறிப்பு :—பிறக்கும்பொழுதே பிராமணன் மூவகைக் கடன் களுடன் பிறக்கிறான். அவையாவன: தேவர் கடன், முனிவர் கடன், பித்ருகடன். தேவர்கடன் யாகம் செய்வதாலும், முனிவர் கடன் வேதமோதுதலாலும், பித்ருகடன் மக்கட்பேற்றாலும் நசிக் கின்றன.

ॠपाॠपसदाशिवान्तरगते ॠपे सदा ॠपिणि
ॠपातीतपरापरार्थनिलये ॠदप्रॠदात्मिके ।
नॄणां जन्मजरापहारनिलये नॄत्राणकल्पद्रुमे
नॄणां पापविमोचनाद्यफलदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ८ ॥

ரூபாரூபஸதாசிவாந்தரகதே ரூபே ஸதா ரூபிணி
ரூபாதீதபராபரார்த்தநிலயே ரூபப்ரரூபாத்மிகே ।
ந்ருணாம் ஜன்மஜராபஹாரநிலயே ந்ருத்ராணகல்பத்ருமே
ந்ருணாம் பாபவிமோசனாத்யபலதே வந்தேऽகிலாண்
[டேச்வரி ॥ 8 ॥

ॠपाॠपसदाशिवान्तरगते பைரவரை ரக்ஷிக்கும் பூ வாயு ஸ்வரூபியான ஸதாசிவனது உள் தத்வமாக விளங்குபவளே **ॠपे** ஞாயக சக்தியைப் பாதுகாப்பவளே **सदा ॠपिणि** எப்

பொழுதும் மாத்ருகா மண்டலத்தைக் காப்பவரோடு கூடிய வளே ऋपातीतपरापरार्थनिलये சிவனுக்கு மேல்பட்டவளும் பரம் அபரமென்ற பொருள்களுக்கு இருப்பிடமாகவுமிருப் பவளே ऋढ, ऋ காரத்தில் நிர்க்குண வஸ்துவாக இருப் பவளும் प्रऋढात्मिके ऋ காரத்தின் சிறந்த த்வனியாகவும் இருப்பவளே नृणां மனிதர்களுடைய जन्मजरापहारनिलये பிறப்பு மூப்பு சாவுகளுக்கு இடமே नृत्राणकल्पद्रुमे மனிதர் களைக் காக்கும் கல்ப விருக்ஷமே नृणां மனிதர்களின் पापविमोचनाद्यफलदे பாபத்திலிருந்து விடுவித்தல் முதலிய பயனை யளிப்பவளே, அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை:—பைரவரை ரக்ஷிக்கும் பூ, வாயு ஸ்வ ரூபியான ஸதா சிவன்து அகத் தத்துவமாக விளங்கு பவளும், ஞாபக சக்தியைப் பாதுகாப்பவளும், எப்பொழு தும் மாத்ருகா மண்டலத்தைக் காப்பவரோடு கூடியவளும் சிவனுக்கு மேற்பட்டவளும், பரம் அபரம் என்ற பொருள் களுக்கு இருப்பிடமானவளும் ऋ என்ற எழுத்தில் நிர்குண வஸ்துவாக இருப்பவளும், ऋ காரத்தின் சிறப்பு வாய்ந்த ஒலியாகப் பொலிபவளும் மனிதர்களின் பிறப்பு, மூப்பு, சாக்காட்டுக்குக் காரணமானவளும், மனிதர்களை (பிறப்பு, மூப்பு, சாக்காட்டினின்று) காக்கும் கற்பக மரமும், மனிதர் களின் பாபத்தைப் போக்குதல் முதலிய பயன்களை யளிப் பவளுமான, ஏ அகிலாண்டேச்வரீ உன்னை நமஸ்கரிக் கிறேன்.

குறிப்பு:—அ முதல் க்ஷ வரை உள்ள எல்லா எழுத்துக்களும் தேவி ஸ்வரூபமானவைகள். ஆகவே ऋ காரம் அவள் ரூபமே என்பது இங்கு கூறப்பட்டது.

क्लृप्ताशेषजगन्महेशनिलये क्लृप्ताङ्गरागोज्ज्वले
क्लृप्ताक्लृप्तविशंक्यमानविलसन्मध्यावलीरञ्जिते ।
लिङ्गाराधनतत्परे लिकुचराजत्पाणिपङ्केरुहे
क्लृप्ताकल्पमनोहराङ्गलतिके वन्देऽखिलाण्डेश्वरि ॥ ९ ॥

க்லுப்தாசேஷஜகந்மஹேசநிலயே
க்லுப்தாங்கராகோஜ்ஜ்வலே
க்லுப்தாக்லுப்தவிசங்க்யமாந
விலஸந்மத்யாவலீரஞ்ஜிதே ।
லிங்காராதந தத்பரே
லிகுசராஜத்பாணிபங்கேருஹே
க்லுப்தாகல்பமநோஹராங்கலதிகே
வந்தேऽகிலாண்டேச்வரி ॥ 9 ॥

क्लृप्ताशेषजगन्महेशनिलये எல்லா உலகத்தையு மேற்படுத்திய மஹேசனை இருப்பிடமாகக் கொண்டவளே **क्लृप्ताङ्गरागोज्ज्वले** பூச்சுப்பூசிக்கொண்டிருப்பதால் விளங்குபவளே **क्लृप्ताक्लृप्तविशंक्यमानविलसन्मध्यावलीरञ्जिते** இருக்கிறதோ இல்லையோ என்று சந்தேஹிக்குமாறு விளங்கு மிடையில் மும்மடிப்புகளால் அழகுள்ளவளே, **लिङ्गाराधनतत्परे** லிங்கத்தைப் பூசிப்பதில் ஈடுபட்டவளே (**क्लृप्ताराधनतत्परे**) (ஏற்பாடான பூஜையில் ஈடுபட்டவளே) **लिकुचराजत्पाणिपङ्केरुहे** எலுமிச்சம் பழத்துடன் விளங்கும் தாமரைபோன்ற உள்ளங்கையை யுடையவளே **क्लृप्ताकल्पमनोहराङ्गलतिके** ஆபரணமணிந்த மனதைக் கவரும் கொடி போன்ற தேகமுள்ளவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை:—எல்லா உலகுகளையும் ஆக்கிய மஹேச னிடம் உறைபவளும், பூச்சினால் ஒளிருபவளும், உள்ளதோ இல்லையோ என் ஐயுறத் தக்கவாறு பொலியும் இடையில் மடிப்புகளால் அழகியவளும், லிங்க பூசையில் ஈடுபட்ட வளும், எலுமிச்சம்பழத்தினால் விளங்கும் தாமரைபோன்ற திருக்கரத்தை யுடையவளும், அணிகள் பெற்று மனத்தைக் கொள்ளை கொள்ளும் கொடிபோன்ற மேனியளுமான உனக்கு வணக்கம், ஏ அகிலாண்ட நாயகியே!

लूताधीशगजेन्द्रपूजितपदे लूनाहितेशान्विते
क्लींकाराङ्कितबिन्दुपीठनिलये क्लींकाररूपेडिते ।
लूतातन्तुजडीकृतेशनिलये लूनाहिवल्लीदले
लूताक्ष्मापतिमुक्तिदातृमहिके वन्देऽखिलाण्डेश्वरि ॥ १० ॥

லூதாதீச கஜேந்த்ர பூஜிதபதே லூநாஹிதேசாந்விதே
க்லீங்காராங்கித பிந்து பீட நிலயே க்லீங்காரரூபேடிதே |
லூதா தந்து ஜடீக்ருதேச நிலயே லூநாஹி வல்லீதலே
லூதாக்ஷ்மாபதி முக்திதாத்ருமஹிகே வந்தேऽகிலாண் டேச்வரி || 10 ||

लूताधीश गजेन्द्र पूजितपदे சிறந்த சிலந்திப்பூச்சியாலும் சிறந்த யானையாலும் பூஜிக்கப்பெற்ற திருவடியை யுடைய வளே **लूनाहिते** கெடுதல்களை (அறுப்பவளே) போக்குபவளே **ईशान्विते** ஈசனோடு கூடியவளே **क्लींकाराङ्कितबिन्दुपीठनिलये** க்லீங்காரத்தோடு கூடிய பிந்து பீடத்தை இருப்பிடமாகக் கொண்டவளே **क्लींकाररूपे** க்லீங்கார ஸ்வரூபிணியே **ईडिते** துதிக்கப்பட்டவளே **लूतातन्तु जडीकृतेशनिलये** சிலந்தி வலையால் குளிர்ச்சிவாய்ந்த ஈசனை இருப்பிடமாகக்

கொண்டவளே लूनाहिवल्लीदले வெற்றிலையைக் கையில் கொண்டவளே लूताक्ष्मापतिमुक्तिदातृ महिले சிலந்தி யரசனுக்கு மோக்ஷமளித்த ஈசனின் மனைவியே, அகிலாண் டேச்வரி, நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை :—சீரிய சிலந்தியாலும் சிறப்புற்ற யானை யாலும் பூஜிக்கப்பட்ட திருவடியை யுடையாளே! தீமை களைக் களைபவளும், ஈசனோடு கூடியவளும், க்லீம் காரத்தால் குறிக்கப்பட்ட பிந்து பீடத்தைத் தன்னிடமாக் கொண்ட வளும், க்லீங்கார ரூபமாகத் துதிக்கப்பட்டவளும், சிலந்தி வலையால் குளிர்ச்சி வாய்ந்த ஈசனிட முறைபவளும், கையில் தாம்பூல மேந்தியவளும், சிலந்தி யரசுக்கு மோக்ஷ மளித்த சிவனார் கொண்டாளுமான ஏ அகிலாண்டேச்வரீ உன்னை வணங்குகிறேன்.

குறிப்பு :—(i) சிலந்தியாலும் யானையாலும் பூஜிக்கப்பட்டமை திருவானைக்கா தலபுராணத்தால் விளங்கும். (ii) க்லீம் என்பது காம ராஜபீஜம். ககார லகாரங்களுடன் கூடிய காமகலை.

एके एकमहाम्बुराशिनिलये एकान्तकल्पोदये
एकानेकतया विभक्तभुवने एकातपत्रोज्ज्वले ।
एणीचारुविलोललोचनयुगे एकावलीभूषणे
एतत्त्वमयाणिमादिवरदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ११ ॥

ஏகே ஏகமஹாம்புராசிநிலயே ஏகாந்தகல்போதயே
ஏகாநேகதயா விபக்தபுவநே ஏகாதபத்ரோஜ்ஜ்வலே ।
ஏணீசாருவிலோலலோசநயுகே ஏகாவலீபூஷணே
ஏதத்த்வமயாணிமாதிவரதே வந்தேऽகிலாண்டேச்வரி.

एके (தன்னைத் தவிர வேறொன்று மில்லாமையால்) ஒருவளாக இருப்பவளே एक महाम्बुराशि निलये ஒப்பற்ற

சிறந்த சமுத்திரத்தை (அமிருதாப்தியை) இருப்பிடமாகக் கொண்டவளே **एकान्तकलशोदये** தனிமையில் தியானிப்பவர் களுக்கு தோற்றமளிப்பவளே, **एकानेकतया** ஒன்றாகவும் பல வாகவும் **विभक्त भुवने** உலகங்களைப் பாகுபாடு செய்தவளே **एकातपत्रो-ज्ज्वले** (ஸாம்ராஜ்யத்திற் கடையாளமான) ஒரு வெண்குடையால் பிரகாசிப்பவளே, **एणी चारुविलोललो-चनयुगे** பெண்மான்போல் அழகிய விருண்ட இரண்டு கண் களையுடையவளே **एकावली भूषणे** ஏகாவலீ என்ற நீண்ட ஹாரத்தை ஆபரணமாகப் பூண்டவளே **एतत्तत्त्वमयाणि-मादिवरदे** இந்தப் பிரபஞ்சதத்வமாக விளங்குபவளும் அணிமாதி சித்திமுதலிய வரமளிப்பவளே அகிலாண்டேச் வரி உன்னை நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை:—தன்னைத் தவிர பிறிதோர் பொரு ளின்மையால் ஓர் தனிப்பொருளும், ஒப்பற்ற பெரும் (அமுதக்) கடலை உறைவிடமாகக் கொண்டவளும், தனிமையில் தியானிப்போருக்குத்தோற்றுபவளும், ஒன்று யும், பலவாயும், உலகங்களைப் பாகுபடுத்தியவளும், ஸாம் ராஜ்யத்திற் கறிகுறியான ஓர் வெண்கொற்றக் குடையால் விளங்குபவளும், பெண்மானது போன்ற அழகிய விருண்ட கண்ணினளும், ஏகாவலீ என்ற நீண்ட மாலையைப் பூண்ட வளும், இது எனச் சுட்டிக் காட்டற்குறிய பிரபஞ்ச தத்துவமாக இருந்துகொண்டு, அணிமாதி ஸித்திகளை வரமாகக் கொடுப்பவளுமான ஏ அகிலாண்ட நாயகியே! உனக்கு நமஸ்காரம்.

குறிப்பு:—படைப்புக்குமுன், சுத்த சைதன்யமாக பரசிவத் தின் அகங்காரரூபிணியாக இருந்துகொண்டு, பின்பு இப்பிரபஞ்

சத்திற்கு அத்தேவியே காரணமென்பது சாஸ்திர முடிபு. விரிவா யறிய விரும்புவோர் காமகலா விலாஸம் என்ற நூல் கண்டு தெளிக.

ऐङ्कारासनमध्यपीठनिलये ऐन्द्रादिलोकप्रदे
ऐरावत्युपमानदेहलतिके ऐन्ध्यादिशक्तीडिते ।
ऐङ्काराक्षरवेदवेद्यविभवे ऐश्वर्यदानेक्षणे
ऐमैमित्यनुसन्दधानभुवने वन्देऽखिलाण्डेश्वरि ॥ १२ ॥

ஐங்காராஸநமத்யபீடநிலயே ஐந்த்ராதிலோகப்ரதே
ஐராவத்யுபமாநதேஹலதிகே ஐந்த்ர்யாதி ஶக்தீடிதே |
ஐங்காராக்ஷரவேதவேத்யவிபவே ஐஶ்வர்யதாநேக்ஷணே
ஐமைமித்யநுஸந்தயாநபுவநே வந்தேऽகிலாண்டேஶ்வரி

ऐङ्कारासन मध्य पीठनिलये ஐங்கார ரூபமான, ஆஸனத் தின் மத்யபாகத்தை இருப்பிடமாகக் கொண்டவளே **ऐन्द्रादि लोकप्रदे** ஸ்வர்க்கம் முதலிய லோகங்களை யளிப்ப வளே **ऐरावत्युपमान देहलतिके** நீருண்ட மேகம்போன்ற கொடி போன்ற தேகமுள்ளவளே **ऐन्द्र्यादि शक्तीडिते** ஐந்த்ரீ முதலிய சக்திகளால் துதிக்கப்பட்டவளே, **ऐङ्काराक्षर-वेदवेद्यविभवे** ஐங்காராக்ஷர மென்ற வேதத்தால் அறியத் தகுந்த பெருமையையுடையவளே **ऐश्वर्य दानेक्षणे** ஐச்வரி யத்தை யளிக்கும் கண்பார்வையை (கடாக்ஷத்தை) உடை யவளே **ऐं ऐं इति अनुसन्धान भुवने** உலகத்தாரால் ஐம் ஐம் என்று அநுஸந்தானம் செய்யப்படுகின்றவளே (தொடர்ந்து நினைக்கப்படுகின்றவளே) அகிலாண்டேச்வரி (உன்னை) நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை:—ஐங்கார ரூபமான இருக்கையின் நடு வில் இருப்பவளும், (தன்னை யண்டியவருக்கு) ஸ்வர்க்கம்

முதலிய திவ்ய லோகங்களை யளிப்பவளும், நீருண்ட மேகத்தை நிகர்த்த கொடிபோன்ற மேனியளும், ஐந்த்ரீ முதலிய சக்திகளால் துதிக்கப்பட்டவளும், ஐந்த்ரீ என்ற வேதத்தால் அறியத் தக்க பெருமையை யுடையவளும், அஷ்டைச்வர்யங்களையும் அருளும் கடைக்கண் நோக்கு டையவளும், உலகினரால் ஐம், ஐம் என்று இடையறுது திவனிக்கப்படுபவளும், அகில அண்டங்களுக்கும் ஈச்வரியு மான உனக்கு நமஸ்காரம்.

குறிப்பு — ब्राह्मी माहेश्वरी चैन्द्री वाराही नारसिंह्यपि । कौमारी वैष्णवी चेति ता एतास्सप्त मातरः ॥ என்று வைஜயந்தி கோசத்தில் குறிக்கப்பட்ட எழுவரே ஐந்த்ரீ முதலாயினோர்.

ओमित्येकपदावलीढितपदे ओजोविशेषान्विते
ओष्ठाधावितबिम्बविद्रुमलते औघत्रयाराधिते ।
औघैरप्सरसां सदा परिवृते ओताखिलार्थाधिपे
ओजोराजितवाग्विभूतिविनुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ १३ ॥

ஓமித்யேகபதாவலீடிதபதே ஓஜோவிசேஷான்விதே
ஓஷ்டாதாவிதபிம்பவித்ருமலதே ஔகத்ரயாராதிதே |
ஔகைரப்ஸரஸாம் ஸதா பரிவ்ருதே ஓதாகிலார்த்தாதிபே
ஓஜோராஜிதவாக் விபூதிவிநுதே வந்தேऽகிலாண்டேச்
[வரி || 13 ||

ओं इति ஓம் என்ற एकपद अवलीढितपदे ஒரு பதத்தால் கூறப்படும் திருவடியையுடையவளே ओजो विशेषान्विते சிறந்த காந்தியுள்ளவளே ओष्ठाधावित बिम्बविद्रुमलते உதட்டைக் கண்டோடிய கோவைப்பழம், பவழக்கொடி இவைகளையு டையவளே (உதட்டால் தாழ்த்தப்பட்ட இவ்விரண்டையு

மூடையவளே) ओघत्रयाराधिते திவ்யௌகம், ஸித்தௌகம், மாநவௌகமென்ற மூன்றால் பூஜிக்கப்பட்டவளே अप्सरसां ओघैः அப்ஸரஸ்களின் கூட்டத்தால் सदा परिवृते எப்பொழுதும் சூழப்பட்டவளே ओताखिलार्थाधिपे எல்லா பொருள்களிலும் ஊடுருவி நிற்கும் யஜமானியே ओजो राजित-वाग्विभूति विनुते ஓஜஸ் என்ற குணத்தால் விளங்கும் (அதிகத்தொடர் மொழியுள்ள) சிறந்தவாக்கால் துதிக்கப்பட்டவளே, அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

(ओष्ठाधःकृत) என்னும் பாடம்.

பொழிப்புரை:—ஓம் என்ற ஓர் பதத்தால் போற்றப்படும் திருவடியை உடையவளும் (ஓம் என்ற ஒரு சொல்லில் அடங்கிய சொற்களால் போற்றப்படும் திருவடியையுடையவளும்) சிறந்த எழில் பெற்றவளும், கோவைக் கனியையும், பவளக்கொடியையும் தனது உதடுகளால் வென்றவளும் ஸித்தௌக திவ்யௌக மானவௌகங்களால் பூஜிக்கப்பட்டவளும், அப்ஸரஸ்ஸுகளின் கூட்டத்தால் எப்பொழுதும் சூழப்பட்டவளும், எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நிற்கும் தலைவியும், ஓஜோ குணத்தால் சீர்பெற்ற சொற்றொடரால் துதிக்கப்பட்டவளுமான ஏ அகிலாண்டேச்வரீ உன்னை வணங்குகிறேன்.

औशीरादिसुगन्धिशोभनकचे औत्पत्तिजालप्रिये
औदासीन्यविभिन्नदैत्यविभवे औपाधिकोपान्विते ॥
औदार्यकरपादपङ्कजयुगे औपम्यहीनानने
औमाकान्तपदप्रदार्तिहपदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ १४ ॥

ஔசீராதிஸுகந்திஶோபநகசே
ஔத்பத்திஜாலப்ரியே
ஔதாஸீந்யவிபிந்நதைத்யவிபவே
ஔபாதிகோபாந்விதே |
ஔதார்யாகரபாதபங்கஜயுகே
ஔபம்யஹீநாநநே
ஔமாகாந்தபதப்ரதார்த்திஹபதே
வந்தே(அ)கிலாண்டேஶ்வரி || 14 ||

औशीरादि सुगन्धि शोभनकचे வெட்டிவேர் முதலியவை களால் நல்வாசனையுள்ள மங்களகரமான கூந்தலுள்ளவளே **औत्पत्तिजालप्रिये** உலக உத்பத்தியென்ற ஜாலவித்தையுள்ளவரின் மனைவியே **औदासीन्य विभिन्न दैत्यविभवे** அசுரர்களின் பெருமையை அலக்ஷ்யமாகப் போக்கியவளே **औपाधि कोपान्विते** உண்மையில்லாத கோபமுள்ளவளே **औदार्याकर पादपङ्कजयुगे** தாராளத்திற் கிருப்பிடமான தாமரைபோன்ற இரண்டு திருவடியுள்ளவளே **औपम्यहीनानने** ஒப்பற்ற முகமுள்ளவளே **औमाकान्त पदप्रदार्तिहपदे** சிவபதத்தை யளிப்பதும் துக்கத்தைப் போக்குவதுமான திருவடியுள்ளவளே, அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :—வெட்டி வேர் முதலியவற்றால் நறுமணம் கமழும் மங்களகரமான குழலுடன் கூடியவளும், உலகத்தைத் தோற்றுவித்தல் என்ற இந்திர ஜாலம் செய்பவரின் மனைவியும், அசுரர்களின் பெருமையை அலக்ஷ்யமாகவே குலைத்தவளும், உண்மையில் வெகுளியற்றவளும், தாராள புத்திக் கிருப்பிடமான திருவடித் தாமரைகளையுடையவளும், ஒப்பற்ற முகமுடையாளும், சிவபதமளித்துத் துயரத்தைத் துடைக்கும் திருவடியுள்ளவளுமான அகிலாண்ட நாயகியே உனக்கு வணக்கம்.

अम्भोजासनमुख्यसेवितपदे अम्भोधरश्यामले
अङ्गाकल्पितरत्नभूषणशते अण्डौघसंसेविते ।
अम्ब्वाकाशतया विभक्तभुवने अम्भोरुहाङ्घ्रिद्वये
अह्नायान्तकसूदनप्रियतमे वन्देऽखिलाण्डेश्वरि ॥ १५ ॥

அம்போஜாஸந முக்ய ஸேவிதபதே
அம்போதரச்யாமலே
அங்காகல்பிதரத்னபூஷணசதே
அண்டௌகஸம்ஸேவிதே |
அம்ப்வாகாசதயா விபக்தபுவநே
அம்போருஹாங்க்ரித்வயே
அஹ்நாயாந்தகஸூதநப்ரியதமே
வந்தேऽகிலாண்டேச்வரி || 15 ||

अम्भोजासन मुख्य सेवितपदे பிரமன் முதலியவர்களால் ஸேவிக்கப்பட்ட திருவடியை யுடையவளே **अम्भोधर-श्यामले** நீருண்ட மேகம்போல் கருத்தவளே **अङ्गाकल्पित-रत्नभूषणशते** சரீரத்திலணிந்துகொள்ளப்பட்ட நூற்றுக் கணக்கான ரத்னங்க ளிழைத்த நகைகளுள்ளவளே **अण्डौघ संसेविते** அண்டங்களின் கூட்டத்தால் வணங்கப் பட்டவளே **अम्बु आकाशतया** ஜலம், ஆகாயம் இவைகளின் ரூபமாக **विभक्त भुवने** உலகத்தைப் பாகுபாடுசெய்தவளே **अम्भोरुहाङ्घ्रिद्वये** தாமரைபோன்ற இரண்டு திருவடி யுடையவளே **अह्नाय** சீக்கிரம் **अन्तकसूदन प्रियतमे** யமனையழித்த கால காலரின் மனைவியே, அகிலாண்டேச்வரி (**त्वां** உன்னை) **वन्दे** நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:— அயன் முதலியோரால் வணங்கப்படும் திருவடியை யுடையவளே! நீருண்ட மேகமெனக் கருத்தவளும், இரத்ன மிழைத்த நூற்றுக்கணக்கான நகைகளை அங்கங்களி லணிந்தவளும், அண்டங்களின் கூட்டத்தால் ஸேவிக்கப்பட்டவளும், ஜலம், ஆகாசம் இந்த உருவமாக உலகை வகைப்படுத்தியவளும், தாமரை போன்ற திருவடியுள்ளவளும், ஓர் நொடியில் யமனைக் குலைத்த கால காலனது காதலியுமாகிய ஏ அகிலாண்ட நாயகி! உன்னை வணங்குகிறேன்.

अस्ताघे अवनम्रदेवनिवहे अस्तोकभाग्योदये
अर्धाधिक्यमनोहरे अचलजे अष्टाक्षरैरर्चिते ।
अर्घातीतमनोज्ञभूषणशते अक्षीणसौभाग्यदे
अर्काम्भोरुहवैरिवह्निनयने वन्देऽखिलाण्डेश्वरि ॥ १६ ॥

அஸ்தாகே அவநம்ரதேவநிவஹே
அஸ்தோகபாக்யோதயே
அர்தாதிக்யமநோஹரே
அசலஜே அஷ்டாக்ஷரைரர்சிதே |
அர்காதீதமநோஜ்ஞபூஷணசதே
அக்ஷீணஸௌபாக்யதே
அர்காம்போருஹவைரிவஹ்நிநயநே
வந்தே(அ)கிலாண்டேச்வரி || 16 ||

मस्ताघे பாபத்தைப் போக்கியவளே अवनम्र देवनिवहे தேவக்கூட்டத்தால் வணங்கப்பெற்றவளே अस्तोक भाग्योदये நிறைந்த செல்வத்தை தோற்றுவிப்பவளே अर्धाधिक्य-मनोहरे (அர்த்த நாரீச்வரரின் பாதிபாக மானதால்) பாதி

பாகத்தால் அதிகம் மனதைக் கவருகின்றவளே **अचलजे** மலைமகளே **अष्टाक्षरैः अर्चिते** (லக்ஷ்மீ அல்லது விஷ்ணுவின் ரூபமானதால்) அஷ்டாக்ஷரங்களால் பூஜிக்கப்பட்டவளே **अगणित मनोज्ञभूषणशते** விலைமதிக்க முடியாத மனதைக் கவரும் நூற்றுக்கணக்கான நகைகளணிந்தவளே **अक्षीण-सौभाग्यदे** குறைவற்ற மேன்மையை யளிப்பவளே **अर्काम्भोरुह वैरि वह्निनयने** சூரிய, சந்திர, அக்னிகளை கண்களாகக்கொண்டவளே, அகிலாண்டேச்வரி (உன்னை) நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை :—பாபத்தைத் துடைப்பவளும், தேவர் குழாத்தினால் வணங்கப்பெற்றவளும், நிறைந்த செல்வத்தை அளிப்பவளும், மாதொரு பாகரான சிவனார் மனதைக் கொள்ளை கொண்டவளும், அஷ்டாக்ஷர மந்திரத்தினால் பூஜிக்கப்படுபவளும், விலைமதிக்க முடியாத அழகாய நூற்றுக் கணக்கான நகைகளணிந்தவளும், குறைவற்ற ஸௌபாக்யத்தை யளிப்பவளும், சூர்ய சந்திராக்னிகளைக் கண்களாகக் கொண்டவளும், அகில அண்டங்களுக்கு தாயியுமான உன்னை நமஸ்கரிக்கிறேன்.

குறிப்பு :—(i) ஒரே பரப்ரஹ்மம் மாயாவசத்தால் தர்மமாகவும், தர்மியாகவும் இரண்டாயிற்று. தர்மம் மறுபடியும் புருஷ ரூபமாகவும் ஸ்த்ரீ ரூபமாகவும் இரண்டாகப் பிரிந்தது. புருஷரூபம் லோகங்களை ரக்ஷிக்கும் தொழிலைக் கொண்டது. ஸ்த்ரீ ரூபம் தர்மியான பரசிவத்திற்கு மஹிஷியாயிற்று. தர்மியான பரசிவமும், தர்மத்தின் இருகூறுகளான ஸ்த்ரீபுருஷ ரூபங்களும் ஆகிய மூன்றும் சேர்ந்தே அகண்ட சச்சிதானந்த பிரஹ்மமாகிறது என்பது சைவமத முடிபு. இதன் விரிவறிய விரும்புவோர் அப்பய்ய தீக்ஷிதர்கள் இயற்றிய ரத்நத்ரய பரீக்ஷை யென்ற நூல் பார்க்க. ஆகவே விஷ்ணுவைக் குறிக்கும் ''**ओं नमो नारायणाय**''

என்று அஷ்டாக்ஷர மந்த்ர தேவியையும் ப்ரதிபாதிக்கும் என்பதில் ஐயமில்லை. (ii) வடமொழிநெடுங் கணக்கு மந்திர சாஸ்திரங்களில் எட்டுவர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவ்வெட்டு வர்க்கங்களின் முதலெழுத்துக்களாவன **अ, क, च, ट, त, प, य, श** இவை முறையே வசினீ, காமேச்வரீ, மோதினீ, விமலா, அருணா, ஜயினீ, ஸர்வேச்வரீ, கௌலினீ என்னும் எட்டு வாக்தேவதைகளால் அதிஷ்டிக்கப்பட்டுள்ளன. **अष्टाक्षरैरचिते** என்பதற்கு வசினீ முதலிய எட்டு வாக்தேவதைகள் ரூபமாக ஆராதிக்கப்படுபவள் எனவும் கூறலாம். (**अष्टाक्षरैः** எட்டாகப் பிரித்த அக்ஷரங்கள் ரூபமாக.)

कावेरीपुलिनालये कमलजे कामारिवामालये
कारुण्यामृतलोचने कविनुते कन्दर्पकान्तिप्रदे ।
कल्याणि क्षितिलोककल्पलतिके कारुण्यवाराम्निधे
कालाम्भोधरकम्रकुण्डलधरे वन्देऽखिलाण्डेश्वरि ॥ १७ ॥

காவேரீபுலினாலயே கமலஜே காமாரிவாமாலயே
காருண்யாம்ருதலோசனே கவிநுதே கந்தர்ப்பகாந்திப்ரதே।
கல்யாணி க்ஷிதிலோககல்பலதிகே காருண்யவாராந்நிதே
காலாம்போதரகம்ரகுண்டலதரே வந்தே(அ)கிலாண்டேச்
[வரி ॥ 17 ॥

कावेरी पुलिनालये காவிரியின் மணல்திட்டை இருப்பிடமாகக் கொண்டவளே **कमलजे** லக்ஷ்மீரூபிணி **कामारि-वामालये** மன்மதவிரோதியான சிவனது இடதுபக்கத்திலிருப்பவளே **कारुण्यामृत लोचने** கருணையாகிய அமுதம் நிறைந்த கண்களையுடையவளே **कविनुते** கவிகளால் துதிக்கப்பட்டவளே **कन्दर्प कान्तिप्रदे** மதனனுக்கு அழகைக் கொடுத்தவளே **कल्याणि** மங்கள ரூபிணி **क्षितिलोक कल्पलतिके**

பூவுலகில் தோன்றும் கற்பகக் கொடியே कारुण्य वाराम्बुधे கருணைக்கடலே कालाम्भोधरकम्र कुण्डलधरे கருத்த நீருண்ட மேகம் போல் அழகிய காதாபரணத்தை (மரகதம்) யணிந்தவளே, அகிலாண்டேச்வரி உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—காவிரியின் மணல் திட்டில் உறைபவளும், லக்ஷ்மீ ரூபிணியும், காமனது விரோதியான சிவனின் இடது பாகத்துள்ளவளும், கருணை யமுதம் நிறைந்த கண்ணியும், கவிகளால் துதிக்கப்பட்டவளும், மன்மதனுக்கு அழகைக் கொடுத்தவளும், (மன்மதனது போன்ற பொலிவை அருள்வாளும்), மங்கல ரூபிணியும், பூவுலகில் காணப்படும் கற்பகக்கொடியும், கருணையங் கடலும், கருமுகிலை நிகர்த்துப் பொலியும் கர்ணாபரணம் பூண்டவளுமான வ அகிலாண்ட நாயகி உன்னை வணங்குகிறேன்.

खर्वाटे खगकेतनानुजवरे खट्वाङ्गपाणिस्तुते
खर्वाखर्वविवर्जिते खगमयूखाराधिते खड्गिनि ।
खद्योतेशवरप्रदे खगनुते खद्योतकोटिप्रभे
खण्डेन्दूज्ज्वलशेखरे खगचरे वन्देऽखिलाण्डेश्वरि ॥ १८ ॥

வர்வாடே வமகேதநாநுஜவரே வட்வாங்கபாணிஸ்துதே
வர்வாவர்வவிவர்ஜிதே வமமயூவாராயிதே வங்கிநி ।
வத்யோதேசவரப்ரதே வமநுதே வத்யோதகோடிப்ரபே
வண்டேந்தூஜ்ஜ்வலசேவரே வமசரே வந்தேऽவிலாண்
[டேச்வரி ॥ 18 ॥

खर्वाटे (நவ நிதிகளில் கடைசியான) கர்வத்தில் ஸஞ்சரிப்பவளே (அல்லது எல்லாரூபமாக இருப்பதால் கர்வாட ஸ்வரூபிணி) **खगकेतनानुजवरे** கருடக்கொடி உள்ள விஷ்ணுவின் சிறந்த தங்கையே, **खट्वाङ्गपाणिस्तुते** சிவனால் (பைரவரால்) துதிக்கப்பட்டவளே **खर्वाखर्वविवर्जिते** தாழ்ந்தவன் சிறந்தவன் என்ற வித்யாஸமில்லாதவளே, **खगमयूखाराधिते** சூரிய கிரணங்களால் சந்தோஷப் படுத்தப் பட்டவளே **खड्गिनि** கத்தியோடு கூடியவளே **खद्योतेश-वरप्रदे** நக்ஷத்ர ராஜனான் சந்திரனுக்கு வரமளித்தவளே, **खगनुते** சூரியனால் துதிக்கப்பட்டவளே, **खद्योतकोटिप्रभे** கோடிசூரியப் பிரகாசமுள்ளவளே **खण्डेन्दूज्ज्वलशेखरे** சந்திர கண்டத்தைப்பிரகாசிக்கும் தலையணியாகக் கொண்டவளே **खगचरे** ஹம்ஸவாஹனத்தில் ஸஞ்சரிப்பவளே அகிலாண்டேச்வரி உன்னை வணங்குகிறேன்.

பொழிப்புரை :—நவ நிதிகளில் கடைசியான கர்வத்தில் ஸஞ்சரிப்பவளும், கருடக் கொடியோனான விஷ்ணுவின் சிறிய ஸஹோதரியும், சிவனால் (பைரவரால்) துதிக்கப்பட்டவளும், குறைவுநிறைவு ஒழிந்தவளும், சூர்ய கிரணங்களால் பூஜிக்கப்பட்டவளும், கத்தியுடன் கூடியவளும், நக்ஷத்ர ராஜனான சந்திரனுக்கு வரமளித்தவளும், சூரியனால் துதிக்கப்பட்டவளும், கோடி ஸூர்ய ப்ரகாசமுள்ளவளும், சந்திர கலையால் விளங்கும் தலைக்கோலமுடையாளும், ஹம்ஸ வாகனத்தில் ஸஞ்சரிப்பவளும், அகில அண்டங்களுக்கும் ஈச்வரியுமான உன்னை வணங்குகிறேன்.

குறிப்பு:—**महापद्मश्च पद्मश्च शङ्खो मकरकच्छपौ । मुकुन्दकुन्दनीलाश्च खर्वश्च निधयो नव ॥** என ஒன்பது நிதிகள் கூறப்படுகின்றன.

गङ्गावर्तसमाननाभिकुहरे गण्डोज्ज्वलत्कुण्डले
गन्धर्वासुरसिद्धकिन्नरनुते गन्धोत्तमालेपिते ।
गम्भीरामृतसिन्धुमध्यनिलये गाम्भीर्यधैर्याधिके
गङ्गोत्तुङ्गतरङ्गशेखरयुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ १९ ॥

கங்காவர்த்தஸமானநாபிகுஹரே
 கண்டோஜ்ஜ்வலத்குண்டலே
கந்தர்வாஸுரஸித்தகிந்நரநுதே
 கந்தோத்தமாலேபிதே ।
கம்பீராம்ருதஸிந்துமத்யநிலயே
 காம்பீர்யதைர்யாதிகே
கங்கோத்துங்கதரங்கசேகரயுதே
 வந்தேऽகிலாண்டேச்வரி ॥ 19 ॥

गङ्गावर्तसमाननाभिकुहरे கங்கையில் உள்ள சுழலுக்கொப்பான தொப்பூழ் துளையை யுடையவளே **गण्डोज्ज्वलत्कुण्डले** கன்னங்களில் ஒளிரும் குண்டலங்களையுடையவளே **गन्धर्वासुरसिद्धकिन्नरनुते** கந்தர்வர், அஸுரர், ஸித்தர், கிந்நரர்களால் துதிக்கப்பட்டவளே **गन्धोत्तमालेपिते** சிறந்த சந்தனப் பூச்சுள்ளவளே, **गम्भीरामृतसिन्धुमध्यनिलये** ஆழமான அமுதக்கடலின் நடுவிலிருப்பவளே **गाम्भीर्यधैर्याधिके** அதிகமான காம்பீர்யமும் தைரியமு முள்ளவளே **गङ्गोत्तुङ्गतरङ्गशेखरयुते** (கங்கையின் உயர்ந்த அலைகளோடுகூடிய சிரஸை உடைய) சிவனோடு சேர்ந்தவளே, அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—கங்கையின் சுழலைத் தரும் தொப்பூழ்க் குழியை யுடையாளே! கன்னங்களில் கதிர்வீசும்

குண்டல மணிந்தாளே! கந்தர்வர், அஸுரர், ஸித்தர், கின்னரர்களால் வணங்கப்பட்டவளே! சீர்வாய்ந்த சந்தனம் பூசியவளே! ஆழமான அமுதக்கடலின் நடுவில் இருக்கை கொண்டவளே! காம்பீர்யமும் தைர்யமும் மிக்கவளே! உயர்ந்து அலையிடும் கங்கையை சிரஸில் தரித்த சிவனுடன் கூடியவளே! அகில அண்டங்களுக்கும் நாயகியே! உனக்கு வணக்கம்.

குறிப்பு:—'**अलङ्कारः कपोलस्य कुण्डलम्**' என்றபடி ஆபரணம் செவிகளில் காணப்பட்டாலும், அதன் அழகு விளங்கும் இடம் கன்னமே.

गीतानन्दमये गिरीशनमिते गीतप्रियाराधिते
गीतोल्लासिनि गीयमानचरिते गीर्नाथसंसेविते ।
गीष्पद्मावरदे गिरीन्द्रनिलये गीर्वाणवृन्दाञ्चिते
गीते गीतमनोहरे गिरिसुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ २० ॥

கீதாநந்தமயே கிரீசநமிதே கீதப்ரியாராதிதே
கீதோல்லாஸிநி கீயமாநசரிதே கீர்நாதஸம்ஸேவிதே। [தே
கீஷ்பத்மாவரதே கிரீந்த்ரநிலயே கீர்வாணவ்ருந்தாஞ்சி
கீதே கீதமநோஹரே கிரிஸுதே வந்தேऽகிலாண்
[டேச்வரி ॥ 20 ॥

गीतानन्दमये ஆநந்தமய கோசமெனப் ப்ரஸித்தி பெற்றவளே **गिरीशनमिते** சிவனால் வணங்கப் பட்டவளே **गीतप्रियाराधिते** க்ருஷ்ணனால் பூஜிக்கப்பட்டவளே **गीतोल्लासिनि** பாட்டுகளுடன் விளங்குபவளே **गीयमानचरिते** பாடப்படும் சரித்திரங்களை யுடையவளே **गीर्नाथसंसेविते** ப்ருஹஸ்பதியால் ஸேவிக்கப்பட்டவளே **गीष्पद्मावरदे** ஸரஸ்வதிக்கும்

லக்ஷ்மிக்கும் வரங்களை யளிப்பவளே **गिरीन्द्रनिलये** மேரு என்ற சிறந்த மலையை இருப்பிடமாகக் கொண்டவளே **गीर्वाणवृन्दार्चिते** தேவக்கூட்டங்களால் பூஜிக்கப்பட்டவளே **गीते** பாடப்பட்டவளே **गीतमनोहरे** பாட்டுக்களால் மனதைக் கவருபவளே **गिरि-सुते** மலைமகளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :—ஆனந்தமய கோசமெனப் பிரஸித்தி பெற்றவளும், சிவனால் வணங்கப்பட்டவளும், கிருஷ்ணனால் பூஜிக்கப்பட்டவளும், ஸங்கீதத்தினால் களிப்பெய்து பவளும் (விளங்குபவளும்), அன்பர்களால் பாடப்படும் திருவிளையாடல்களை யுடையவளும், பிருஹஸ்பதியால் ஆராதிக்கப்பட்டவளும், ஸரஸ்வதீ லக்ஷ்மீக்களுக்கு வரந் தருவாளும், மேருவென்னும் சிறந்த மலையை இருப்பிட மாய்க் கொண்டவளும், தேவர் குழாத்தினால் பூஜிக்கப் பட்டவளும், பாடப்பட்டவளும், இசையினால் மனதைக் கொள்ளை கொள்வாளும், மலைமகளுமான ஏ அகிலாண் டேச்வரி, உனக்கு நமஸ்காரம்.

गुप्ते गुप्ततरे गुहेश्वरदे गुच्छोज्ज्वलन्मल्लिके
गुह्याचारगते गुरुस्तनभरे गुच्छार्धहारोज्ज्वले ।
गुल्फस्थे गुणमन्दिरे गुरुवरे गुल्फोल्लसन्नूपुरे
गूढार्थान्तगते गुरूत्तमनुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ २१ ॥

குப்தே குப்ததரே குஹேச்வரதே
குச்சோஜ்ஜ்வலந்மல்லிகே
குஹ்யாசாரகதே குருஸ்தநபரே
குச்சார்த்தஹாரோஜ்ஜ்வலே ।

குல்பஸ்தே குணமந்திரே
குருவரே குல்போல்லஸந்நூபுரே
கூடார்த்தாந்தகதே குரூத்தமநுதே
வந்தேऽகிலாண்டேச்வரி || 21 ||

गुप्ते குப்த தேவதாரூபிணி गुप्ततरे குப்ததர தேவதாஸ்வரூபே गुहेशवरदे குஹனுக்கும் ஈசனுக்கும் வரமளிப்பவளே गुच्छोज्ज्वलन्मल्लिके கொத்தாக விளங்கும் மல்லிகைப் பூவையுடையவளே गुह्याचारगते குஹ்யாசாரமுள்ளவரிடம் தோன்றுபவளே गुरुस्तनभरे பருத்த ஸ்தனபாரமுள்ளவளே गुच्छार्पितहारोज्ज्वले கொத்துக்கொத்தாகக் கட்டப்பட்ட சிறு மாலையால் விளங்குபவளே गुल्फस्थे குதிகாலில் வீற்றிருப்பவளே गुणमन्दिरे நற்குணங்களுக்கிருப்பிடமே गुरुवरे சிறந்த ஆசிரியராக விளங்குபவளே गुल्फोल्लसन्नूपुरे குதிகாலில் விளங்கும் பாதஸரத்தையுடையவளே गूढार्थान्तरगे கூடார்த்தமான வேதத்தின் (அந்தத்தில்) உபநிடதங்களில் தோன்றுபவளே गुरूत्तमनुते ஆசார்யர்களால் துதிக்கப்பட்டவளே அகிலாண்டேச்வரி உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

गुच्छाच्छहारोज्ज्वले என்றும் பாடம்.

பொழிப்புரை:—குப்த யோகினீ ரூபியாயும், குப்ததர யோகினீ ரூபியாயும், சுப்ரஹ்மண்யருக்கும் சிவனுக்கும் வரமளிப்பவளாகவும், கொத்துக்களாக விளங்கும் மல்லிகை மலர்களை யுடையவளாகவும், குஹ்யாசாரமுள்ளவர்களிடம் தோற்றுபவளாகவும், பருத்த ஸ்தனபாரமுள்ளவளாகவும், கொத்துக் கொத்தாகக் கட்டப்பட்ட சிறு மாலைகளால் பொலிபவளாகவும், குதிகாலில் வீற்றிருப்பவளாகவும், நற்குணங்களுக் குறைவிடமாகவும், சிறந்

ஆசிரியராகவும், குதிகாலில் விளங்கும் பாதஸரத்தை யுடையவளாகவும், மறைமுடியில் தோற்றுபவளாகவும், ஆசார்ய பாதர்களால் துதிக்கப்பட்டவளாகவுமுள்ள ஏ அகிலாண்டேஸ்வரீ, உன்னை வணங்குகிறேன்

குறிப்பு :—(i) ஸமஸ்தப்ரகட, குப்த, குப்ததர-என்பதாக மந்திர சாஸ்திரங்களில் காண்க. (ii) परा प्रत्यक्चिती रूपा पश्यन्ती परदेवता என்பது லலிதா ஸஹஸ்ரநாமம்.

घण्टाघोरनिनादघातितमहादैत्ये घनश्यामले
घर्माघर्ममयूखवह्निनयने घर्मप्रशान्तिप्रदे ।
घोराघोरविघोषदानवगणप्रोद्घुष्टघोरारवे
घोराघौघनिवारणे घननिभे वन्देऽखिलाण्डेश्वरि ॥ २२ ॥

கண்டாகோரநிநாதகாதிதமஹாதைத்யே கனஶ்யாமலே
கர்மாகர்மமயூகவஹ்நிநயனே கர்மப்ரஶாந்திப்ரதே [லே
கோராகோரவிகோஷதானவகணப்ரோத் குஷ்ட
கோராகௌககநிவாரணே கனநிபே [கோராரவே
வந்தே‌ऽகிலாண்டேஶ்வரி ॥ 22 ॥

घण्टाघोरनिनादघातितमहादैत्ये மணியின் கொடுஞ் சத்தத்தால் பெரிய அஸுரர்களான (மஹிஷன்) முதலியவர்களைக் கொல்பவளே घनश्यामले நீருண்ட மேகம்போல் கருத்தவளே घर्माघर्ममयूखवह्निनयने சூரியன், சந்திரன், அக்னிகளைக் கண்களாகக் கொண்டவளே घर्मप्रशान्तिप्रदे தாபசாந்தியை யளிப்பவளே घोराघोरविघोषदानवगण-प्रोद्घुष्टघोरारवे இரவில் கொடுஞ்சத்தம் செய்யும் அஸுரக் கூட்டத்தில் வலுவாகச் செய்யப்பட்ட கடுஞ்சத்தத்தை உடையவளே घोराघौघनिवारणे கொடும் பாபக்கூட்டத்

ளைப் போக்குபவளே **घननिभे** வர்ஷிக்கும் மேகம் போன்றவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :—மணியின் கொடிய சப்தத்தால் (மஹிஷன்) முதலிய போரக்கர்களைக் கொன்றவளும், கார்முகில்லைக் கரியளும், ஸூர்ய சந்திராக்னிகளைக் கண்களாகப் பெற்றவளும், தாபத்தைத் துடைப்பவளும், இரவில் கடுமையாக சப்திக்கும் அஸுரர் குழாத்தினிடையில் வலிய கொடும் ஒலியைச் செய்பவளும், கொடும் பாபக் கூட்டத்தைத் தவிர்ப்பவளும், பொழியும் முகிலெனத் துக்கவளும் ஆன அகிலாண்டேசியை நமஸ்கரிக்கிறேன்.

குறிப்பு :—तापत्रयाग्निसन्तप्तसमाह्लादनचन्द्रिका என்பது லலிதா ஸஹஸ்ரநாமம்.

चातुर्वर्ग्यफलप्रदे सुचरिते चामुण्डिरूपोत्तरे
चक्राधिष्ठितपादपद्मचतुरे चन्द्रानने चण्डिके ।
चन्द्रोपेन्द्रचराचरात्मकजगद्रूपे चलत्कुण्डले
चञ्चल्लोचनवञ्चितेश्वरशिवे वन्देऽखिलाण्डेश्वरि ॥ २३ ॥

சாதுர்வர்க்யபலப்ரதே ஸுசரிதே
சாமுண்டிரூபோத்தரே
சக்ராதிஷ்டிதபாதபத்மசதுரே
சந்த்ராநநே சண்டிகே ।
சந்த்ரோபேந்த்ரசராசராத்மகஜகத்ரூபே
சலத்குண்டலே
சஞ்சல்லோசனவஞ்சிதேச்வரசிவே
வந்தே ऽகிலாண்டேச்வரி ॥ 23 ॥

चातुर्वर्ग्यफलप्रदे தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷ மென்ற பயன்களை யளிப்பவளே **सुचरिते** மங்களகரமான சரிதையுள்ளவளே **चामुण्डरूपोत्तरे** சாமுண்டிதேவி உருவத்தால் சிறந்தவளே (**चण्डाख्यासुरमुण्डभङ्गचतुरे** சண்டனென்ற அஸுரன் முண்டன் இவர்களை வதம் செய்வதில் திறமையுள்ளவளே) **चक्राधिष्ठितपादपद्मचतुरे** சக்ரத்திலிருக்கும் தாமரைபோன்ற பாதமுள்ளவளே! திறமையுள்ளவளே **चन्द्रानने** சந்திரன்போன்ற முகமுள்ளவளே! **चण्डिके** சண்டிகா தேவியே **चन्द्रोपेन्द्रचराचरात्मकजगद्रूपे** சந்திரன், விஷ்ணு, ஸ்தாவரஜங்கம ரூபமான உலகரூபமாக விளங்குபவளே **चलत्कुण्डले** அசையும் குண்டலங்களை (காதாபரணத்தை) உடையவளே **चञ्चल्लोचनवञ्चितेश्वरशिवे** அழகாக அசையும் கண்களால் ஈச்வரனை மயக்குபவளே மங்களத்தையும் அளிப்பவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:— அறம் பொருள் இன்பம் வீடெனும் நால்வகை மக்கட்பேற்றை யளிப்பவளும், மங்கலகரமான திருவிளையாடல் பெற்றாளும், சாமுண்டிதேவி உருக்கொண்டு சீர்பெற்றவளும், (சண்டன், முண்டன் என்ற அரக்கர்களைக் குலைக்கும் திறம படைத்தாளும்), திங்களென வொளிரும் முகத்தினளும், சண்டிகாதேவியும், சந்திரன், விஷ்ணு, இயங்கு நிலைத்திணைகளென்ற உலகு ஆகிய உருக்கொண்டவளும், அசைகின்ற குண்டலம் அணிந்தவளும், அலையும் கண்களால் ஈசனை மையலுறச் செய்பவளும், மங்களத்தை யருள்பவளுமான அகிலாண்டேச்வரிக்கு நமஸ்காரம்.

चण्डाख्यासुरमुण्डभङ्गचतुरे என்றும் பாடம்.

छिद्रग्रसितचन्द्रिकाधवलिते छायेश्वरद्योतिते
छन्दान्दोलितभूषणाङ्कितगले छन्दश्रियालङ्कृते ।
छायाधीशधनञ्जयेन्दुनयने छन्नान्धकारारुणे
छन्दोवृन्दमहस्सुकान्तिनिलये वन्देऽखिलाण्डेश्वरि ॥ २४ ॥

ச²த்³ரக்³ரஸ்மிதசந்த்³ரிகாத⁴வலிதே
சா²யேஶ்வரத்³யோதிதே
ச²ந்தா³ந்தோ³லிதபூ⁴ஷணாங்கிதக³லே
ச²ந்த³ஶ்ரியாலங்க்ருதே |
சா²யாதீ⁴ஶத⁴னஞ்ஜயேந்து³நயநே
ச²ந்நாந்த⁴காராருணே
ச²ந்தோ³வ்ருந்த³மஹஸ்ஸுகாந்திநிலயே
வந்தே³(அ)கி²லாண்டே³ஶ்வரி || 24 ||

छिद्रग्रसितचन्द्रिकाधवलिते துரிதங்களைப் போக்கும் மந்தஹாஸமாகிற நிலவால் வெளுத்தவளே **छायेश्वरद्योतिते** சூரியனைப் பிரகாசப்படுத்துபவளே (**छायेश्वरदर्शन** த்தால் பிரகாசப்படுத்தப்பட்டவளே) **छन्दान्दोलितभूषणाञ्चितगले** இஷ்டம்போல் அசையும் நகையால் (பதக்கமுள்ள அட்டிகையால்) அழகுபடுத்தப்பட்ட கழுத்தை உடையவளே **छन्दश्रियालङ्कृते** தன்னிஷ்டப்படி இருத்தல் என்ற பெருமையால் அழகுபடுத்தப்பட்டவளே, **छायाधीशधनञ्जयेन्दुनयने** சூரியன், அக்னி, சந்திரர்களைக் கண்களாகக் கொண்டவளே **छन्नान्धकारारुणे** உலகத்தை மறைக்கும் இருட்டுக்கு சூரியனாக விளங்குபவளே **छन्दोवृन्दमहस्सुकान्तिनिलये** வேதக்கூட்டமாகிற ஒளியின் சிறந்த கிரணங்களுக்கு இருப்பிடமே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை :—தீமைகளைக் களையும் நிலவுபோன்ற புன்முறுவலால் வெளுத்தவளும், கதிரவனை ஒளிபெறச் செய்பவளும், சாயேஸ்வர தர்சனத்தால் பிரகாசப்படுத்தப் பட்டவளும், இஷ்டம்போல் அசையும் பதக்கத்தை யுடைய அட்டிகையால் அழகிய கழுத்தினளும், தன் விருப்பப்படி இருத்தலென்ற பெருமையா லழகுற்றவளும், சூர்யன் அக்னி சந்திரர்களைக் கண்களாகக் கொண்ட வளும், உலகை மறைக்கும் இருளை யகற்றும் சூர்யனும், வேதக் கூட்டமாகிற ஓர் ஒளியின் சிறிய கதிர்களுக்கு உறைவிடமும் (ஸகல வேதமயி ஆனவளும்ான) ஆன அகிலாண்டேஸ்வரிக்கு நமஸ்காரம்.

जम्बूमूलनिधे जनार्दननुते जम्भारिसम्भाविते
जम्बूद्वीपमनोज्ञकल्पलतिके जह्नात्मजाशेखरे ।
जन्मव्याधिजरापहे जलमये जाम्बूनदालङ्कृते
जम्बूनाथमनोहरे जननुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ २५ ॥

ஜம்பூமூலநிதே ஜநார்தநநுதே
ஜம்பாரிஸம்பாவிதே
ஜம்பூத்வீபமநோஜ்ஞகல்பலதிகே
ஜஹ்நாத்மஜாசேகரே ।
ஜந்மவ்யாதிஜராபஹே ஜலமயே
ஜாம்பூநதாலங்க்ருதே
ஜம்பூநாதமநோஹரே ஜநநுதே
வந்தேऽகிலாண்டேச்வரி ॥ 25 ॥

जम्बूमूलनिधे நாவல் மரத்தடியிலுள்ள புதையலே (ஜம்புநாதருடைய புதையலே) जनार्दननुते விஷ்ணுவால்

துதிக்கப்பட்டவளே **जम्भारिसंभाविते** இந்திரனால் பூஜிக்கப்பட்டவளே **जम्बूद्वीपमनोज्ञकल्पलतिके** ஜம்பூத்தீவில் விளங்கும் மனதைக்கவரும் கற்பகக்கொடியே **जह्नुात्मजाशेखरे** (சிவரூபியானதால்) கங்கையைத் தலையிலணிந்தவளே (கங்கைக்கு சிரோபூஷணமாக விளங்குபவளே) **जन्मव्याधिजरापहे** பிறப்பு, வியாதி, கிழத்தனங்களைப் போக்குபவளே **जलमये** ஜலரூபிணி **जाम्बूनदालंकृते** தங்கத்தால் (தங்க நகைகளால்) அழகு படுத்தப்பட்டவளே **जम्बूनाथ-मनोहरे** ஜம்புநாதரின் மனதைக் கவர்பவளே **जननुते** ஜனங்களால் துதிக்கப்பட்டவளே—அகிலாண்டேச்வரி உன்னை வணங்குகிறேன்.

பொழிப்புரை :—நாவல் மரத்தடியிலுள்ள புதையலும் (ஜம்புநாதரின் அருட்பொருளும்) விஷ்ணுவால் துதிக்கப்பட்டவளும்; இந்திரனால் பூஜிக்கப்பட்டவளும், ஜம்பு விருக்ஷமுள்ள தீவில் (இரு காவிரிகளுக்கு நடுவிலிருப்பதால் தீவு) விளங்கும், மனதைக்கவரும் கற்பகக் கொடியும், (சிவரூபியானதால்) கங்கையைத் தலையிலணிந்தவளும், (கங்கைக்கு சிரோ பூஷணமாக விளங்குபவளும்) பிறப்பு, பிணி, மூப்புகளைப் போக்குபவளும், ஜலரூபிணியும், தங்க நகைகளால் அணி செய்விக்கப்பட்டவளும், ஜம்புநாதரின் மனதைக் கவருபவளும், ஜனங்களால் துதிக்கப்பட்டவளுமான அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

குறிப்பு — **जन्ममृत्युजरातप्तजनविश्रान्तिदायिनी** என்று லலிதா ஸஹஸ்ர நாமம்.

झञ्झावाततरङ्गितप्रचिमलश्रीनिर्झराप्लाविते

झङ्कारीकृतषट्पदाळकभरे झाटित्यबुद्धिप्रदे ।

झर्झरारवभूषणे झलझलन्मञ्जीरपादाम्बुजे
झल्लीमद्दलझर्झरस्वननुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ २६ ॥

ஜஞ்ஜாவாததரங்கித ப்ரவிமல ஸ்ரீநிர்ஜராப்லாவிதே
ஜங்காரீக்ருதஷட்பதாலகபரே ஜாடித்யபுத்திப்ரதே |
ஜர்ஜாராரவபூஷணே ஜலஜலன்மஞ்ஜீரபாதாம்புஜே
ஜல்லீமத்தளஜர்ஜரஸ்வநநுதே வந்தே(அ)கிலாண்டேஸ்வரி.

झञ्झावाततरङ्गितप्रविमलश्रीनिर्झराप्लाविते ஜஞ்சா மாருதத்தால் அலைகளோடுகூடிய மிகவும் சுத்தமான திருக்காவிரியில் ஸ்நாநம் செய்விக்கப்பட்டவளே (காவிரியால் நனைக்கப்பட்டவளே) **झङ्कारीकृतषट्पदालकभरे** ஜங்காரம் செய்யும் வண்டுகளோடு கூடிய நிறைந்த கூந்தலுள்ளவளே **झाटित्यबुद्धिप्रदे** சீக்கிரமான தோற்றமுள்ள புத்தியை (ப்ரதிபையை)க் கொடுப்பவளே **झर्झरारवभूषणे** ஜர்ஜர் என்று ஒலிக்கும் நகைகளை உடையவளே **झलझलन्मञ्जीरपादाम्बुजे** ஜல்ஜல் என்று ஒலிக்கும் சிலம்போடு கூடிய திருவடித் தாமரையுடையவளே **झल्लीमद्दलझर्झरस्वननुते** ஜல்லீ, மத்தளம், ஜர்ஜரம் என்ற வாத்யங்களின் ஒலியுடன் துதிக்கப்பட்டவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—ஜஞ்ஜா மாருதத்தால் அலைகொண்ட தூய திருக்காவிரியால் ஸ்நாநம் செய்விக்கப்பட்டவளும், ஜங்காரம் செய்யும் வண்டுகள் மொய்த்து நிறைந்த குழலினளும், பிரதிபையை யளிப்பவளும், ஜர்ஜர் என ஒலிக்கும் நகைகள் பூண்டாளும், ஜல்ஜல் எனச் சப்திக்கும் சிலம்புடன் கூடிய தாமரைத் திருவடியினளும், ஜல்லீ, மத்தளம் ஜர்ஜரம் என்ற வாத்யங்களின் ஒலியுடன் துதிக்கப்பட்

வருமான ஏ அகிலாண்டேச்வரி! உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

ज्ञानानन्दमहासमुद्रतरणे ज्ञानात्मरूपापरे
ज्ञानज्ञेयमये त्वदंघ्रिभजतां ज्ञानप्रदेऽज्ञानिनाम् ।
ज्ञानाज्ञानमयस्वरूपिणि शिवज्ञानप्रकाशप्रदे
ज्ञातिक्षेत्रकलत्रधान्यधनदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ २७ ॥

ஜ்ஞாநாநந்தமஹாஸமுத்ரதரணே
ஜ்ஞாநாத்மரூபாபரே
ஜ்ஞாநஜ்ஞேயமயே த்வதங்க்ரிபஜதாம்
ஜ்ஞாநப்ரதேऽஜ்ஞாநிநாம் |
ஜ்ஞாநாஜ்ஞாநமயஸ்வரூபிணி
ஶிவஜ்ஞாநப்ரகாஶப்ரதே
ஜ்ஞாதிக்ஷேத்ரகலத்ரதாந்யதநதே
வந்தேऽகிலாண்டேஶ்வரி || 27 ||

ज्ञानानन्दमहासमुद्रतरणे ஞானம் ஆனந்தம் என்ற பெரிய சமுத்திரத்திலுள்ள படகே, **ज्ञानात्मरूपापरे** ஞானமே தன் உருவாகக்கொண்டு மேம்பாடுள்ளவளே **ज्ञानज्ञेयमये** அறிவு அறியப்படும் பொருளாக விருப்பவளே **त्वदंघ्रिभजतां** உமது திருவடியை யடைகின்ற **अज्ञानिनां** அஞ்ஞானிகளுக்கு **ज्ञानप्रदे** அறிவைக் கொடுப்பவளே **ज्ञानाज्ञानमयस्वरूपिणि** கடவுளுருவாயும் உலக உருவாயுமிருப்பவளே **शिवज्ञानप्रकाशप्रदे** சிவாத்ம ஞான ஒளியை யளிப்பவளே **ज्ञाति, क्षेत्र, कलत्र, धान्य, धनदे** ஜ்ஞாதி, பூமி, மனைவி, தானியம், தனங்களை யளிப்பவளே, அகிலாண்டேச்வரி உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :— அறிவு, ஆனந்தம் என்னும் பெருங் கடலினுள்ள படும் அறிவே தனது உருவாகக் கொண்டு மேம்பட்டவளும், அறிவாயும் அறியப்படுபொருளாயு மிருப்பவளும், தனது திருவடியையடையும் அஞ்ஞானி களுக்கு அறிவைக் கொடுப்பவளும், கடவுள் உருவாயும் உலக உருவாயுமுள்ளவளும், சிவான்ம ஞானப்பிர காசத்தை அருள்வாளும், ஜ்ஞாதி, பூமி, மனைவி, தானியம், தனங்களை யளிப்பவளுமாகிய வ அகிலாண் டேச்வரீ, உனக்கு வணக்கம்.

टङ्काद्यायुधभूषणोज्ज्वलकरे ठावेक्ष्यमानानने
डिम्भाहुंकृतढक्कृतासुरशरे डोलाडिदेशस्थिते ।
डिम्भाकारतया सुपालितजने ढक्कारवोद्घोषिते
ढंढण्ढेति झटिक्कणादिमहिते वन्देऽखिलाण्डेश्वरि ॥ २८ ॥

டங்காத்யாயுதபூஷணோஜ்ஜ்வலகரே
○ாவேக்ஷ்யமாநாநநே
டிம்பாஹுங்க்ருத டங்க்ருதாஸுரசரே
டோலாடிதேசஸ்திதே ।
டிம்பாகாரதயா ஸுபாலிதஜநே
டக்காரவோத்கோஷிதே
டண்டண்டேதி ஜடிக்வணாதிமஹிதே
வந்தேऽகிலாண்டேச்வரி ॥ 28 ॥

टङ्काद्यायुधभूषणोज्ज्वलकरे டங்கம் முதலிய ஆயுதங்களை பூஷணமாகக்கொண்டு விளங்கும் கைகளையுடையவளே ठा वेक्ष्यमानानने ○ என்ற எழுத்துப்போல் வட்டமாகக்காணப் படும் முகமுள்ளவளே डिम्भाहुंकृतढक्कृतासुरशरे பாலையின்

ஹூம்காரத்தால் வீணாக்கப்பட்ட அசுரர்களின் பாணங்களை யுடையவளே **डोलाडिढेशासिते** ஊஞ்சலாடும் ஈசனிடம் மந்த ஹாஸத்தோடு கூடியவளே **डिम्भाकारतया सुपालितजने** பால உருவத்துடன் ஜனங்களை நன்றாக ரக்ஷிப்பவளே **ढक्कारवोद्घोषिते** டக்கையின் சப்தத்தால் ஒலியுள்ளவளாக்கப்பட்டவளே **दण्ड-ण्देति झटिकणादिमहिते** டம்டம் என்று சேர்ந்த ஒலி முதலியவற்றால் பூஜிக்கப்பட்டவளே (**ढंकारसप्तस्वरात् ढण्डण्देति झटिक-णादिमहिते** டங்காரம், ஸப்த ஸ்வரங்களைத் தொடர்ந்த டண்டண்ட என்ற சேர்ந்த ஒலியால் பூஜிக்கப் பட்டவளே) (ஜதிஸ்வரம் என்று சொல்வதுண்டு) அகி லாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:— டங்கம் முதலிய ஆயுதங்களைப் பூஷணமாகக்கொண்டு விளங்கும் கைகள் உள்ளவளும், O என்ற எழுத்துப்போல் வட்டமான முகமுள்ளவளும், பாலா தேவியின் ஹூங்காரத்தால் அஸுரர்களின் அம்புகளை வீணாக்குபவளும், ஊசலாடும் ஈசனிடம் மந்த ஹாஸம் புரிபவளும், பாலாதேவி உருக்கொண்டு ஜனங்களை நன்கு ரக்ஷிப்பவளும், முழங்கும் உடுக்கையின் ஒலியுடன் கூடியவளும், டம் டம் என்று ஒன்று சேர்ந்து வாத்ய கோஷாதிகளால் பூஜிக்கப்படுகிறவளுமான அகிலாண்ட நாயகியே! உனக்கு வணக்கம்.

तत्त्वार्थप्रतिपाद्यमानचरणे तत्त्वत्रयोद्दीपिके
तत्त्वातीतपदे तपोधननुते तारेशचूडामणे ।
तारुण्यामृतसिन्धुमध्यलतिके तार्क्ष्यध्वजाराधिते
तापिञ्छस्तबकद्युते तनुलते वन्देऽखिलाण्डेश्वरि ॥ २९ ॥

தத்வார்த்யப்ரதிபாத்யமானசரணே
தத்வத்ரயோத்தீபிகே
தத்வாதீதபதே தபோதனநுதே
தாரேசசூடாமணே |
தாருண்யாம்ருதஸிந்துமத்யலதிகே
தார்க்ஷ்யத்விஜாராதிதே
தாபிஞ்சஸ்தபகத்யுதே தநுலதே
வந்தே ஹ்யகிலாண்டேச்வரி || 29 ||

तत्त्वार्थप्रतिपाद्यमानचरणे தத்வார்த்தம் (உண்மைப் பொருள்) எனக்கூறப்படும் திருவடியை யுடையவளே **तत्त्वत्रयोद्दीपिके** தத்வத்ரயத்தை (ஜீவன், ஆத்மா, பிரபஞ்சம்) விளங்கச் செய்பவளே **तत्त्वातीतपदे** தத்வதிற்கு மேலான நிலையுள்ளவளே **तपोधननुते** ரிஷிகளால் துதிக்கப்பட்டவளே **तारेशचूडामणे** சந்திரனைத் தலையாபரணமாகக் கொண்டவளே **तारुण्यामृतसिन्धुमध्यलतिके** வாலிபமாகும் அமுதக்கடலின் நடுவே தோன்றிய கொடியே **तार्क्ष्यध्वजाराधिते** விஷ்ணுவால் பூஜிக்கப்பட்டவளே **तापिञ्छस्तबकद्युते** பச்சைமரத்தின் பூங்கொத்தின் நிறமுள்ளவளே **तनुलते** கொடிபோன்ற சரீரமுள்ளவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—உண்மைப் பொருளான மறைகளால் உரைக்கப்படும் திருவடியை யுடையாளும், மூன்று தத்வங்களை விளங்கச் செய்பவளும், தத்வங்களுக்கு மேல் நிலையிலுள்ளவளும், தவசிகளால் துதிக்கப்பட்டவளும், சந்திரனைத் தலையணியாகக் கொண்டவளும், யௌவனமாகும் அமுதக்கடலின் நடுவண் தோன்றிய கொடியும், கருடக் கொடியோனான விஷ்ணுவால் ஆராதிக்கப்பட்டவளும்,

பச்சை மரத்தின் பூங்கொத்துப் போன்ற நிறமுள்ளவளும், கொடியென மெல்லியளுமான அகிலாண்ட நாயகியை வணங்குகிறேன்.

குறிப்பு :—ஜீவன், ஆத்மா, பிரபஞ்சம் ஆகிய மூன்றும் இங்கு குறிப்பிடப்பட்ட தத்வங்கள்.

स्थाणुप्रेमनिधे स्थितीशमहिते स्थैर्यस्थिते स्थापिके
स्थानास्थानकृतार्थदेहिनिवहस्थित्यन्तसर्गोद्यते ।
स्थानाधिक्यमनोहरे स्थिरतरस्थाण्वन्तरालाश्रये
स्थूलागोचरदर्शने स्थितिमये वन्देऽखिलाण्डेश्वरि ॥ ३० ॥

ஸ்தாணுப்ரேமநிதே ஸ்திதீசமஹிதே
ஸ்தைர்யஸ்திதே ஸ்தாபிகே
ஸ்தாநாஸ்தாநக்ருதார்த்தேஹி
நிவஹஸ்தித்யந்தஸர்கோத்யதே |
ஸ்தாநாதிக்யமநோஹரே
ஸ்திரதரஸ்தாண்வந்தராலாச்ரயே
ஸ்தூலாகோசரதர்சநே ஸ்திதிமயே
வந்தேऽகிலாண்டேச்வரி || 30 ||

स्थाणुप्रेमनिधे சிவனது அன்பிற்கிடமே **स्थितीशमहिते** விஷ்ணுவால் பூஜிக்கப்பட்டவளே **स्थैर्यस्थिते** உறுதியுள்ளவர்களிடத்தி லிருப்பவளே **स्थापिके** நிலை நிறுத்துபவளே **स्थानास्थानकृतार्थदेहिनिवहस्थित्यन्तसर्गोद्यते** பிராணிகளைத் தகுந்த நிலையில் வைத்து கிருதார்த்தர்களாக்குபவளே, பாதுகாத்தல், அழித்தல், படைத்தல்களில் முயன்றவளே **स्थानाधिक्यमनोहरे** சிறந்த நிலையிலிருப்பதால் மனதைக் கவர்பவளே **स्थिरतरस्थाण्वन्तरालाश्रये** உறுதியுள்ள கடவு

ளாகிய சிவனது ஹிருதயத்திலிருப்பவளே **स्थूलागोचरदर्शने** ஸ்தூலத்திற்குப் புலப்படாத தோற்றமுள்ளவளே **स्थितिमये** ரக்ஷாரூபிணி அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை :—சிவனது அன்பிற்கிடமும், விஷ்ணுவால் பூசிக்கப்பட்டவளும், உறுதியுள்ளவர்களிடமிருப்பவளும், நிலைநிறுத்துபவளும், பிராணிகளைத் தகுந்த நிலையில் அமர்த்திப் பயன் நுகர்விப்பாளும், காத்தலழித்தல் படைத்தலென்னும் முத்தொழிலில் முயன்றுறும் சீரிய நிலையிலிருந்துகொண்டு மனதைக் கொள்ளைகொள்வாளும், (உறுதியுள்ள) கடவுளாகிய பரசிவனது இதயத்திலுறைபவளும், ஸ்தூலத்திற்குத் தோன்றாதவளும், ரக்ஷாரூபிணியுமான ஏ அகிலாண்டேச்வரீ உன்னை வணங்குகிறேன்.

दाक्षाचारवरप्रदे दमयुते दक्षे दयाङ्कुरिते
दान्ते द्रष्टृमनोहरद्विजवरे दन्तावलाराधिते ।
दानादानविदानचोदनपरे दातृस्वरूपापरे
दैन्याध्यात्मिकतापहारिचरणे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ३१ ॥

தாக்ஷாசாரவரப்ரதே தமயுதே தக்ஷே தயாங்கூரிதே
தாந்தே த்ரஷ்ட்ருமனோஹரத்விஜவரே தந்தாவலாராதி[தே ।
தானாதானவிதானசோதனபரே தாத்ருஸ்வரூபாபரே
தைன்யாத்யாத்மிகதாபஹாரிசரணே வந்தேऽகிலாண்
[டேச்வரி ॥ 31 ॥

दाक्षाचारवरप्रदे தக்ஷிண மார்க்கத்தில் உபாஸிப்பவர்களுக்கு வரங்களையளிப்பவளே **दमयुते** அடக்கத்தோடு கூடியவளே **दक्षे** சாமர்த்தியமுள்ளவளே **दयाङ्कुरिते** தயவின் தோற்றமுள்ளவளே **दान्ते** அமைதியுள்ளவளே **द्रष्टृमनोहर**

द्विजवरे பார்ப்பவர் மனதைக்கவரும் சிறந்த பற்களை உடையவளே **दन्तावलाराधिते** யானையால் பூஜிக்கப்பட்டவளே **दानादानविदानचोदनपरे** தானம், அதானம், விதானங்களை ஏவும் வேதத்தில் ஈடுபட்டவளே **दातृस्वरूपापरे** கொடையாளியாக விளங்குபவளே சிறந்தவளே **दैन्याध्यात्मिकतापहारिचरणे** ஏழ்மையையும் ஆத்யாத்மிக தாபத்தையும் போக்கும் திருவடியை யுடையவளே அகிலாண்டேச்வரி உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :—தக்ஷிண மார்க்கத்திலிருந்து உபாஸிப்பவர்களுக்கு வரங்களை யளிப்பவளும், அடக்கமுள்ளவளும், திறமைபெற்றவளும், தயவின் தோற்றமுடையாளும், அமைதியுள்ளவளும், பார்ப்போர் மனதைக் கவரும் பற்களையுடையாளும், யானையால் பூஜிக்கப்பட்டவளும், தானம், அதானம், விதானம் இவைகளை ஏவும் வேதத்தில் ஈடுபட்டவளும்; கொடையாளியின் உருவினளும், சிறந்தவளும், ஏழ்மையையும் ஆத்யான்மிக தாபத்தையும் துடைக்கும் திருவடியினளுமான அகிலாண்டேச்வரீ! உன்னை வணங்குகிறேன்.

दिव्यज्ञानमये दिवाकरनिभे दिव्याम्बरालङ्कृते
दिव्यस्त्रीजनसेविते द्विजमये दीक्षाप्रदानोद्यते ।
दीप्ते दीप्तशशाङ्कवह्निनयने दीनादिमुक्तिप्रदे
दिक्पालादिदिगम्बरार्चितपदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ २२ ॥

திவ்யஜ்ஞானமயே திவாகரநிபே
திவ்யாம்பராலங்க்ருதே
திவ்யஸ்த்ரீஜநஸேவிதே
த்விஜமயே தீக்ஷாப்ரதானோத்யதே |

தீப்தே தீப்தஶஶாங்கவஹ்நிநயநே

தீநாதிமுக்திப்ரதே

திக்பாலாதிதிகம்பரார்சிதபதே

வந்தேऽகிலாண்டேஶ்வரி || 82 ||

दिव्यज्ञानमये சிறந்த ஞான ரூபிணி दिवाकरनिभे சூரியன் போன்றவளே दिव्याम्बरालङ्कृते சிறந்த வஸ்திரத்தால் அழகு படுத்தப்பட்டவளே दिव्यस्त्रीजनसेविते தேவஸ்திரீ ஜநங்களால் ஸேவிக்கப்பட்டவளே द्विजमये பிராமணஸ்வரூபிணி दीक्षाप्रदानोद्यते ஸமய தீக்ஷை கொடுப்பதில் முயன்றவளே दीप्ते ஒளிருபவளே दीप्तशशाङ्कवह्निनयने சூரிய, சந்திர, அக்னிகளைக் கண்களாகக் கொண்டவளே, दीनादिमुक्तिप्रदे எளியவர் முதலியோருக்கு முக்தி அளிப்பவளே दिक्पालादि-दिगम्बरार्चितपदे திக்பாலர்கள் முதலியவராலும் அவதூதர்களாலும் பூஜிக்கப்பெற்ற திருவடியையுடையவளே அகிலாண்டேச்வரி உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—சீர்பெற்ற அறிவுருவினளும், கதிரவனெனத் தக்கவளும், சிறந்த வஸ்திரத்தால் அழகுபடுத்தப்பட்டவளும், பிராஹ்மண ரூபிணியும், ஸமய தீக்ஷை கொடுப்பதில் முயன்றவளும், ஒளிருவாளும், சூரிய சந்திராக்கினிகளைக் கண்களாகக் கொண்டவளும், எளியவர் முதலியோருக்கு மோக்ஷமளிப்பவளும், திக்பாலர் முதலியவர்களாலும் அவதூதர்களாலும் பூஜிக்கப்படும் திருவடியினளுமான அகிலாண்ட நாயகியை வணங்குகிறேன்.

दुर्भिक्षादिसमस्तदुःखहरणे दुःशीलतापापहे

दुर्गाद्यावृतिदेवतार्चितपदे दूर्वाङ्कुरश्यामले ।

दुर्लक्ष्यागमचित्तदूरचरिते दुर्गादुवस्थापरे
दुर्वासादिमुनीश्वरस्तुतिपदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ २२ ॥

துர்பிக்ஷாதிஸமஸ்தது:க்கஹரணே
து:ஶீலதாபாபஹே
துர்காத்யாவ்ருதிதேவதார்சிதபதே
தூர்வாங்குரஶ்யாமலே |
துர்லக்ஷ்யாகமசித்ததூரசரிதே
துர்காதுவஸ்யாபரே
துர்வாஸாதிமுனீஶ்வரஸ்துதிபதே
வந்தேऽகிலாண்டேஶ்வரி || 83 ||

दुर्भिक्षादिसमस्तदुःखहरणे தார்பிக்ஷம் முதலிய எல்லா துக்கங்களையும் போக்குபவளே **दुःशीलतापापहे** கெட்ட நடத்தை என்ற பாபத்தைப் போக்குபவளே (கெட்ட ஸ்வபாவத்தையும் தாபத்தையு மழிப்பவளே) **दुर्गाद्यावृतिदेवतार्चितपदे** துர்க்கை முதலிய ஆவரண தேவதைகளால் பூஜிக்கப்பட்ட திருவடியை யுடையவளே **दूर्वाङ्कुरश्यामले** அறுகம்புல்லின் முளைபோல் கருத்தவளே **दुर्लक्ष्य आगमचित्तदूरचरिते** அறியமுடியாதவளும் வேதம், மனது இவைகளுக்கு எட்டாத இடத்தில் திரிபவளுமானவளே **दुर्गादुवस्थापरे** துர்க்கையாக இருந்துகொண்டு பூசனையில் ஈடுபட்டவளே **दुर्वासादिमुनीश्वरस्तुतिपदे** தூர்வாஸர் முதலிய முனீச்வரர்களின் துதிக்கு இடமே (முனீச்வரர்களால் துதிக்கப்பட்ட திருவடியுள்ளவளே) அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :— தார்பிக்ஷம் (பஞ்சம்) முதலாய எல்லாத் துன்பங்களையும் துடைப்பவளே! தீய இயற்கையையும்,

பாபத்தையும் போக்குபவளே! துர்க்கை முதலிய ஆவரண தேவதைகளால் பூசிக்கப்படும் திருவடியினளும், அருகம் புல் மூளைபோல் கருத்தவளும், அறியமுடியாதவளும், வேதங்களுக்கும் மனதிற்குமெட்டாத இடத்தில் ஸஞ்சரிப்பவளும், துர்க்கையாக இருந்துகொண்டு ஈசனது பூசனையில் ஈடுபட்டவளும், துர்வாஸர் முதலியோரால் துதிக்கப்பட்ட திருவடியினளுமான அகிலாண்ட நாயிகே! உனக்கு வணக்கம்.

குறிப்பு:—यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह என்பது மறைமுடி.

धर्मिष्ठे धरणीधरेन्द्रतनये धाराधरोद्यत्प्रभे
धम्मिल्लाञ्चितमल्लिकादिकुसुमे धर्मादिसंसेविते ।
धर्माद्यर्थचतुष्टयस्थितिपदे धामत्रयाराधिते
धन्ये धार्मिकचित्तनित्यनिलये वन्देऽखिलाण्डेश्वरि ॥ ३४ ॥

தர்மிஷ்டே தரணீதரேந்த்ரதநயே
தாராதரோத்யத்ப்ரபே
தம்மில்லாஞ்சிதமல்லிகாதிகுஸுமே
தர்மாதிஸம்ஸேவிதே ।
தர்மாத்யர்தசதுஷ்டயஸ்திதிபதே
தாமத்ரயாராதிதே
தந்யே தார்மிகசித்தநித்யநிலயே
வந்தேऽகிலாண்டேச்வரி ॥ 34 ॥

धर्मिष्ठे கடமையைச் செய்பவர்களில் சிறந்தவளே धरणीधरेन्द्रतनये மலையரசன் மகளே धाराधरोद्यत्प्रभे மின்னல் ஒளியுள்ளவளே (கருண்ட மேகத்திலுள்ள ஒளி உள்ள

வளே) धम्मिल्लाञ्चितमल्लिकादिकुसुमे மல்லிகை முதலிய பூக்களைத் தலைமுடியில் கொண்டவளே धर्मादिसंसेविते தர்மம் முதலியவற்றால் ஸேவிக்கப்பட்டவளே धर्माद्यर्थचतुष्टयस्थितिपदे தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்களை நிலைக்கச் செய்யும் திருவடியுள்ளவளே धामत्रयाराधिते (வாக்கு, மனஸ், காயம்) ஸ்வர்க்கம், மத்யம், பாதாளங்களில் பூஜிக்கப்பட்டவளே धन्ये பாக்யமுள்ளவளே धार्मिकचित्तनित्यनिलये தார்மிகர்களது சித்தத்தை எப்பொழுதும் இருக்குமிடமாகக் கொண்டவளே அகிலாண்டேச்வரீ நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :—கடமையைச் செய்பவர்களிற் சிறந்தவளும், மலையரசன் மகளும், மின்னற் பொலிவினளும் மல்லிகை முதலிய மலர்களை முடியிற் சூடியவளும், தர்மம் முதலியவற்றால் ஸேவிக்கப்பட்டவளும், தர்ம அர்த்த காம மோக்ஷங்களாகும் நால்வகைப் புருஷார்த்தங்களை நிலைக்கச் செய்யும் திருவடியினளும், மூவிடங்களிலும் பூசிக்கப்பட்டவளும், பாக்யமுள்ளவளும், தார்மிகர்களின் சித்தத்தில் எப்பொழுது முள்ளவளுமான அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

குறிப்பு:—धामत्रयं வாக்கு, மனது, காயம், அல்லது ஸ்வர்க்கம், மத்யம், பாதாலம்.

नानारत्नविभूषणे नवघनश्यामे नटेशप्रिये
नक्षत्रेशधरे नगेन्द्रनिलये नागारिवाहानुजे ।
नानादेववृते नरोत्तमनुते नाथे नृमुक्तिप्रदे
नाकौकोगणनम्यमानचरणे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ३५ ॥

நாநாரத்னவிபூஷணே நவகனச்யாமே நடேசப்ரியே
நக்ஷத்ரேசதரே நகேந்த்ரநிலயே நாகாரிவாஹாநுஜே |
நாநாதேவவ்ருதே நரோத்தமநுதே நாதே ந்ருமுக்திப்ரதே
நாகௌகோகணநம்யமானசரணே வந்தேऽகிலாண்டேச்வரீம்
[வரி || 35 ||

नानारत्नविभूषणे பலவித ரத்னங்களை ஆபரணமாகக் கொண்டவளே **नवघनश्यामे** நீருண்ட மேகம்போல் கருத்தவளே **नटेशप्रिये** நடராஜன் மனைவியே **नक्षत्रेशधरे** சந்திரனைத் தலையில் கொண்டவளே **नगेन्द्रनिलये** மேருமலையை இருப்பிடமாகக் கொண்டவளே **नागारिवाहानुजे** கருடனை வாஹனமாகக் கொண்ட விஷ்ணுவின் தங்கையே **नानादेववृते** பல தேவர்களால் சூழப்பட்டவளே **नरोत्तमनुते** விஷ்ணுவால் துதிக்கப்பட்டவளே **नाथे** பாதுகாப்பவளே **नृमुक्तिप्रदे** மனிதர்களுக்கு மோக்ஷமளிப்பவளே **नाकौकोगणनम्यमानचरणे** ஸ்வர்க்கத்தை இருப்பிடமாகக் கொண்ட தேவர்களால் வணங்கப்பட்ட திருவடியுள்ளவளே, அகிலாண்டேச்வரி உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :—பல ரத்னங்களை யாபரணமாயணிந்தவளும், நீருண்ட மேகம்போல் கருத்தவளும், நடராஜன் மனைவியும், சந்திர கலையைத் தலையில் அணிந்தவளும், மேருமலையை யிருப்பிடமாகக் கொண்டவளும், கருட வாகனனாகிய விஷ்ணுவின் தங்கையும், பல தேவர்களால் சூழப்பட்டவளும், விஷ்ணுவால் பூஜிக்கப்பட்டவளும், பாதுகாப்பவளும், மனிதர்களுக்கு மோக்ஷ ஸுக மளிப்பவளும், ஸ்வர்க்கத்திலுள்ள தேவகணங்களால் வணங்கப்படும் திருவடியாளுமாகிய அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

नीहाराचलकन्यके निगमगे नित्यात्मिके निर्मले
निःशेषाण्डसुमातृके निशिचराराध्ये निशीशाङ्कि(ञ्चि)ते ।
नीपारण्यनिवासनित्यरसिके निर्निद्रपद्मेक्षणे
निःशोकाकृतिके निरञ्जनपदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ २६ ॥

நீஹாராசலகந்யகே நிகமகே நித்யாத்மிகே நிர்மலே
நிஶ்ஶேஷாண்டஸுமாத்ருகே நிசிசராராத்யே நிசீசாங்
[(கிஞ்சி)தே
நீபாரண்யநிவாஸநித்யரஸிகே நிர்நித்ரபத்மேக்ஷணே
நிஶ்ஶோகாக்ருதிகே நிரஞ்ஜநபதே வந்தேऽகிலாண்டேச்வரி.

नीहाराचलकन्यके பனிமலையின் மகளே **निगमगे** வேதங்களில் விளங்குபவளே **नित्यात्मिके** நித்யா தேவதா ரூபிணி **निर्मले** மாசற்றவளே **निःशेषाण्डसुमातृके** எல்லா உலகங்களுக்கும் நன்மைதரும் தாயே **निशिचराराध्ये** அரக்கர்களாலும் பூஜிக்கப்பட்டவளே **निशीशाङ्किते** சந்திரனைத் தலையில் கொண்டவளே **नीपारण्यनिवासनित्यरसिके** கதம்ப வனத்தில் வசிப்பதில் எப்பொழுது/ம் அன்புள்ளவளே **निर्निद्रपद्मेक्षणे** அப்பொழுது மலர்ந்த தாமரை போன்ற கண்களுள்ளவளே **निःशोकाकृतिके** ஆனந்த ரூபிணி **निरञ्जनपदे** மாசற்ற/நிலையுள்ளவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை:—பனிவரையின் மகளும் வேதங்களில் விளங்குபவளும் நித்யா தேவதா ரூபிணியும், மாசற்றவளும், எல்லா அண்டங்களுக்கும் நன்மை பளிக்கும் தாயும், அரக்கர்களாலும் பூசிக்கப்பட்டவளும், கதம்ப வனத்தில் வசிப்பதில் எப்பொழுதும் ஆவல் கொண்டவளும், அன்றலர்ந்த தாமரை போன்ற கண்களுள்ள

வளும், ஆனந்த உருவினளும், மாசற்ற நிலையுள்ளவளு மாகிய அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

पद्मे पद्मनिभानने परतरे पद्मार्चितांघ्रिद्वये
पद्मस्थे परदानवारिविनुते पद्मासनाराधिते ।
पद्मास्ये परलोकसाधनपरे पञ्चाक्षरालंकृते
पक्षापक्षविवर्जिते परशिवे वन्देऽखिलाण्डेश्वरि ॥ २७ ॥

பத்³மே பத்³மநிபா⁴நநே பரதரே பத்³மார்சிதாங்க்⁴ரித்³வயே
பத்³மஸ்தே² பரதா³நவாரிவிநுதே பத்³மாஸநாராதி⁴தே।
பத்³மாஸ்யே பரலோகஸாத⁴நபரே பஞ்சாக்ஷராலங்க்ருதே
பக்ஷாபக்ஷவிவர்ஜிதே பரஶிவே வந்தே³ऽகி²லாண்டே³ஶ்வரி.

पद्मे லக்ஷ்மியே **पद्मनिभानने** தாமரைக்கொப்பான முக முள்ளவளே **परतरे** மிகவும் மேம்பாடுள்ளவளே **पद्मार्चितांघ्रिद्वये** லக்ஷ்மியால் பூஜிக்கப்பட்ட இருபாதங்களை யுடையவளே **पद्मस्थे** தாமரையிலிருப்பவளே **परदानवा-रिविनुते** சிறந்தவரான விஷ்ணுவால் துதிக்கப்பட்டவளே **पद्मासनाराधिते** பிரமனால் பூஜிக்கப்பட்டவளே **पद्मास्ये** தாமரை போன்ற முகமுள்ளவளே **परलोकसाधनपरे** பர லோகத்தை யளிப்பவளே **पञ्चाक्षरालङ्कृते** சிவனை யழகு படுத்துபவளே **पक्षापक्षविवर्जिते** தன்னைச் சேர்ந்தவன் சேராதவன் என்ற வித்தியாச மில்லாதவளே **परशिवे** சிறந்த மங்களத்தை யளிப்பவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—லக்ஷ்மியும், தாமரை போன்ற முகத் தினளும், மிக்க மேம்பாடுள்ளவளும், லக்ஷ்மியால் பூஜிக்கப் பெற்ற பாதத்தினளும், தாமரையி லுறைவாளும், சி

வாய்ந்த விஷ்ணுவால் துதிக்கப்பட்டவளும், அயனல் அர்ச்சிக்கப்பட்டவளும், சிறந்த உலகங்களை யளிப்பவளும், சிவனை யணிசெய்பவளும், தன்னைச் சார்ந்தவன், மாற்றான் என்ற வேற்றுமை யென்றுளும், உயரிய மங்கல மளிப்பவளுமான வ அகிலாண்ட நாயகியே! உன்னை நமஸ்கரிக்கிறேன்.

குறிப்பு :—पद्मे स्थितां पद्मवर्णां—उदारां என்பது श्रीसूक्तम् ।

फुल्लाम्भोजदलेक्षणेन्दुविकृतालीकाभिरामानने
फूत्काराहिफणाधरेन्द्ररमणीनृत्तान्तरालस्थिते ।
स्फायत्पण्डितसूक्तिमर्मविभवे स्फाटिक्यतेजोमय-
स्फूर्जत्कान्तिमये फणीन्द्रवरदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ३८ ॥

ஃபுல்லாம்போஜதலேக்ஷணேந்து
விக்ருதாலீகாபிராமாநநே
ஃபூத்காராஹிஃபணாதரேந்த்ர
ரமணீந்ருத்தாந்தராலஸ்திதே ।
ஸ்ஃபாயத்பண்டிதஸூக்திமர்மவிபவே
ஸ்ஃபாடிக்யதேஜோமய
ஸ்ஃபூர்ஜத்காந்திமயே ஃபணீந்த்ரவரதே,
வந்தேऽகிலாண்டேச்வரி ॥

फुल्लाम्भोजदलेक्षणा மலர்ந்த தாமரை யிதழ்போன்ற கண்களுள்ளவளாயும் इन्दुविकृतालीकाभिरामानने (விக்ருத இந்து) அஷ்டமீ சந்திரன் போன்ற நெற்றியா லழகிய முகமுள்ளவளே फूत्काराहिफणाधरेन्द्ररमणीनृत्तान्तरालस्थिते பூத்காரம் செய்கின்ற அஹிகள், படமெடுக்கும் பாம்புகள் இவைகளுக்கு அரசர்களுடைய மனைவிகளால் செய்யப்படும் ந்ருத்தத்தின் நடுவிலிருப்பவளே स्फायत्पण्डितसूक्तिमर्म-

विभवे நிறைந்த அறிஞர்களின் சிறந்த மொழிகளின் உயிர்ச் செல்வமாக இருப்பவளே (ரஸரூபிணி) **स्फाटिक्यतेजोमयस्फूर्जत्कान्तिमये** ஸ்படிக ஒளி நிறைந்த சிவனிடம் விசேஷமாகப் பிரகாசிக்கும் ஒளி வடிவே **फणीन्द्रवरदे** சேஷன் முதலிய பாம்பரசர்களுக்கு வரமளிப்பவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :—மலர்ந்த தாமரை யிதழ்போன்ற கண்களை யுடையவளும், அஷ்டமீ சந்திர கலைபோன்ற நெற்றியாலழகிய முகத்தினளும், பூத்காரம் செய்யும் அஹிகள், படமெடுக்கும் பாம்புகள் இவைகளுக்கு அரசர்களின் மனைவிகளால் செய்யப்படும் ந்ருத்தத்தின் நடுவே இருப்பவளும், அறிஞர்களின் சிறந்த நிறைமொழிகளின் உயிர்ச் செல்வமாயிருப்பவளும், (ரஸ ரூபிணி) ஸ்படிக ஒளி நிறைந்த சிவனிடம் விசேஷமாகப் பிரகாசிக்கும் ஒளிவடிவினளும், சேஷன் முதலிய பாம்பரசர்களுக்கு வரமளிப்பாளுமாகிய அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

குறிப்பு :—**रसशेवधिः** என்பது லலிதா ஸஹஸ்ர நாமம்.

बालेऽबालपराक्रमे बहुविधे बालप्रवालाधरे
बालादित्यसमप्रभे बहुनुते बालेन्दुभूषोज्ज्वले ।
बन्धूकारुणविग्रहे बहुविधब्रह्माण्डभाण्डोदरि
ब्रह्मागस्त्यसुरेन्द्रवन्दितपदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ २९ ॥

பாலேऽபாலபராக்ரமே பஹுவிதே
பாலப்ரவாலாதரே
பாலாதித்யஸமப்ரபே பஹுநுதே
பாலேந்துபூஷோஜ்ஜ்வலே ।

பந்தூகாருணவிக்ரஹே
பஹுவிதப்ரஹ்மாண்டபாண்டோதரி
ப்ரஹ்மாகஸ்த்யஸுரேந்த்ரவந்திதபதே
வந்தேऽகிலாண்டேஸ்வரி || 39 ||

बाले பாலாதேவி ஸ்வரூபிணி **अबालपराक्रमे** தேர்ந்த வீரச் செய்கையுள்ளவளே **बहुविधे** பலவிதமாக விளங்குபவளே **बालप्रवालाधरे** இளம் பவழம்போன்ற கீழ் உதடுள்ளவளே **बालादित्यसमप्रभे** இளஞ் சூரியனுக்கொப்பான ஒளியுள்ளவளே **बहुनुते** பலரால் துதிக்கப்பட்டவளே **बालेन्दुभूषोज्ज्वले** இளஞ் சந்திரனாகிய ஆபரணத்தால் விளங்குபவளே **बन्धूकारुणविग्रहे** செம்பருத்திப் புஷ்பம் போல் சிவந்த சரீரமுள்ளவளே **बहुविधब्रह्माण्डभाण्डोदरि** பலவிதமான ப்ருமமாண்டங்களுக்குப் பெட்டியாக விளங்கும் வயிற்றை உடையவளே (அவளது வயிற்றில் பல பிருமமாண்ட பீஜங்கள் உள்ளன) **ब्रह्मागस्त्यसुरेन्द्रवन्दितपदे** பிரமன், அகஸ்தியர், இந்திரர்களால் வணங்கப்பட்ட திருவடியுள்ளவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—பாலாதேவியும், தேர்ந்த வீரச் செயலுள்ளவளும், பலவிதமாய் விளங்குபவளும், இளம் பவழம் போன்ற கீழ் உதட்டைப் பெற்றவளும், இளஞ் சூரியனுக் கொப்பான ஒளியுள்ளவளும், பலரால் துதிக்கப்பட்டவளும், இளஞ்சந்திரனாகுமாபரணத்தால்பொலிவுற்றவளும், செம்பருத்தியெனச் சிவந்த மேனியாளும், பலவிதமான பிருமமாண்டங்களுக்கு பெட்டகமாய் விளங்கும் வயிற்றினைப் பெற்றவளும், பிரமன், அகஸ்தியர், இந்திரர்களால் வணங்கப்பட்ட திருவடியினளுமாகிய அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

भावातीतपदप्रवर्तितगुणे भाषे भवाराधिते
भावाद्ये भवरोगभञ्जनकरे भद्रे भयच्छेदिनि ।
भव्ये भाग्यवदुत्तमेड्यचरणे भागीरथीशान्विते
भास्वच्चन्द्रविलोचनार्चितपदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ४० ॥

ஹாவாதீதபதப்ரவர்த்திதகுணே ஹாஷே
ஹவாராதிதே
ஹாவாத்யே ஹவரோகஹஞ்ஜனகரே ஹத்ரே
ஹயச்சேதினி ।
ஹவ்யே ஹாக்யவதுத்தமேட்யசரணே
ஹாகீரதீசான்விதே
ஹாஸ்வச்சந்த்ரவிலோசனார்சிதபதே
வந்தேऽகிலாண்டேச்வரி ॥ 40 ॥

भावातीतपदे மனதிற் கெட்டாத நிலையுள்ளவளே **प्रवर्तितगुणे** ஸத்வாதி குணங்களைப் பரவச் செய்கின்றவளே **भाषे** பாஷாரூபிணி **भवाराधिते** சிவனால் பூஜிக்கப்பட்டவளே **भावाद्ये** பதார்த்தங்களுக்கு முதல்வளே (காரணமானவளே) **भवरोगभञ्जनकरे** ஜனன மரணப் பிணியைப் போக்குபவளே **भद्रे** மங்கள ரூபிணி **भयच्छेदिनि** பயத்தைப் போக்குபவளே **भव्ये** சுபரூபிணி **भाग्यवदुत्तमेड्यचरणे** புண்ணியவான்களான சிறந்தவர்களால் துதிக்கப்பெறும் திருவடியுற்றவளே (**भार्गवदर्पहेड्यचरणे** ராமனால் துதிக்கத் தகுந்த திருவடியுள்ளவளே) **भागीरथीशान्विते** கங்கையோடும் பரமசிவனோடும் கூடியவளே **भास्वच्चन्द्रविलोचनार्चितपदे** சூரிய சந்திரர்களைக் கண்களாகக் கொண்ட விஷ்ணுவால் பூஜிக்கப்பட்ட திருவடியுள்ளவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—மனதிற் கெட்டாத நிலையுள்ளவளும், ஸத்வாதி குணங்களைப் பரவச் செய்வாளும், பாஷா ரூபிணியும், சிவனால் பூசிக்கப்பட்டவளும், பதார்த்தங்களுக்குக் காரணமாய் இருப்பவளும், ஜனன மரணப் பிணியைப் போக்குபவளும், மங்கள ரூபிணியும், பயத்தைத் தவிர்ப்பவளும், சுப ரூபிணியும் புண்யவான்களான சீரியரால் இறைஞ்சப்பட்ட கழல்களுடையாளும், (ராமனால் துதிக்கப்பட்ட திருவடியினளும்) கங்கையோடும் சிவனோடும் கூடியவளும், சூர்ய சந்திரர்களைக் கண்களாகப் பெற்ற விஷ்ணுவால் பூஜிக்கப்பட்ட திருவடியினளுமாகிய அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

குறிப்பு:—**सैषा त्रय्येव विद्या तपतीति । वाग्वै तत्पश्यन्ती वदति** என்ற மறையும் **भाषारूपा** என்ற லலிதா ஸஹஸ்ரநாமமும் நோக்குக.

माये मन्मथसेविते मरकतश्यामे मनोज्ञामले
मायामोहविवर्जिते मणिमयाकल्पे महामञ्जुले ।
मायातीतमहामुनीन्द्रवरदे माणिक्यकेयूरके
मालालङ्करणे मतङ्गतनये वन्देऽखिलाण्डेश्वरि ॥ ४१ ॥

மாயே மந்மதஸேவிதே மரகதச்யாமே மநோஜ்ஞாமலே
மாயாமோஹவிவர்ஜிதே மணிமயாகல்பே மஹாமஞ்ஜுலே।
மாயாதீதமஹாமுநீந்த்ரவரதே மாணிக்யகேயூரகே
மாலாலங்கரணே மதங்கதநயே வந்தேऽகிலாண்டேச்வரி ||

माये மாயா ரூபிணி **मन्मथसेविते** மன்மதனால் ஸேவிக்கப்பட்டவளே **मरकतश्यामे** பச்சைக் கல்போல் கருத்தவளே **मनोज्ञामले** மனதைக் கவருகின்றவளே மாசற்றவளே **माया-मोहविवर्जिते** மாயை மோஹமில்லாதவளே **मणिमयाकल्पे** ரத்ன

மயமான நகைகளையுடையவளே महामञ्जुले சிறந்த மஞ்சுளாதேவி ஸ்வரூபிணி मायातीतमहामुनीन्द्रवरदे மாயைக்கு மேற்பட்டவரான சிறந்த மஹர்ஷியான சிவனுக்கு வரத்தை யளிப்பவளே माणिक्यकेयूरके மாணிக்ய மிழைத்த தோள்வளைகளையுடையவளே मालालङ्करणे மாலைகளை அணியாகக்கொண்டவளே मतङ्गतनये மதங்கரின் புதல்வியே அகிலாண்டேச்வரி வணங்குகின்றேன்.

பொழிப்புரை—மாயா ரூபிணியும், மன்மதனால் ஸேவிக்கப்பட்டவளும், பச்சைக் கல்போல் கருத்தவளும், மனதைக் கொள்ளை கொள்வாளும், மாசற்றவளும், மாய்ய மோஹ மொழிந்தவளும், ரத்ன மிழைத்த அணிகள் கொண்டாளும், சீர்பொலியும் மஞ்சுளா தேவியும், மாயையைக் கடந்தவரான, சிறப்புற்ற மகர்ஷியாகும் சிவனுக்கு வரந்தருவாளும், மாணிக்க மிழைத்த தோள்வளைகள் பூண்டாளும், மாலைகளை யணிந்தவளும், மதங்கரின் புதல்வியுமான அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

குறிப்பு:—'यो देवानां प्रथमं पुरस्तात् विश्वाधिको रुद्रो महर्षिः' தைத்திரீய உபநிடதம் 4-ம் ப்ரஸ்நம்.

मित्राग्नीन्दुविलोचने मिहिरभे मीनोल्लसल्लोचने
मिथ्याज्ञानमनोतिदूरचरणे मीनध्वजाराधिते ।
मीमांसादिसमस्तशास्त्रमहिते मृष्टान्नदानोद्यमे
मित्रोद्भासिनि मित्रवह्निविनुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ ४२ ॥

மித்ராக்நீந்துவிலோசனே மிஹிரபே
மீநோல்லஸல்லோசனே
மித்யாஜ்ஞானமனோதிதூரசரணே
மீநத்வஜாராதிதே ।

மீமாம்ஸாதிஸமஸ்தசாஸ்த்ரமஹிதே
ம்ருஷ்டான்னதானோத்யமே
மித்ரோத்பாஸிநி மித்ரவஹ்நிவிநுதே
வந்தே(அ)கிலாண்டேஸ்வரி ॥ 42 ॥

मित्राग्नीन्दुविलोचने சூரியன், அக்னி, சந்திரர்களை கண்களாகக் கொண்டவளே **मिहिरमे** சூரியன் ஒளியுள்ளவளே **मीनोल्लसल्लोचने** மீன்போல் விளங்கும் கண்கள் உள்ளவளே **मिथ्याज्ञानमनोतिदूरचरणे** பொய்யறிவிற்கும் மனதிற்கு மெட்டாத வெகு தூரத்திலுள்ள திருவடியையுடையவளே **मीनध्वजाराधिते** மன்மதனால் பூஜிக்கப்பட்டவளே **मीमांसादिसमस्तशास्त्रमहिते** மீமாம்ஸை முதலிய எல்லா சாஸ்திரங்களாலும் புகழ்பெற்றவளே **मृष्टान्नदानोद्यमे** (உலகிற்கு, ஸம்பிரமமான) சாப்பாட்டை யளிப்பதில் முயற்சியுள்ளவளே **मित्रोद्भासिनि** சூரியனை விளங்கச் செய்பவளே (சூரிய மண்டலத்தில் விளங்குபவளே) **मित्रवह्निविनुते** சூரியனாலும் அக்னியாலும் துதிக்கப்பட்டவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—சூர்யாக்னி சந்திரர்களைக் கண்களாகக் கொண்டவளும், சூரியனது ஒளி பெற்றவளும், மீனைப் பொலியும் கண்களுடையவளும், பொய்யறிவிற்கும் மனதிற்கு மெட்டாத் திருவடியினளும், மன்மதனால் பூஜிக்கப்பட்டவளும், மீமாம்ஸை முதலிய ஸகல சாஸ்திரங்களாலும் புகழ்ப்பட்டவளும், உலகினற்கு நிறைந்த உணவை யளிப்பதில் முயன்றவளும், சூர்யனை விளங்கச் செய்பவளும், சூர்யனாலும் அக்னியாலும் துதிக்கப்பட்டவளுமான அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

குறிப்பு:—சூர்யனை விளங்கச் செய்பவள், அல்லது சூர்ய மண்டலத்தில் விளங்குபவள். तस्य भासा सर्वमिदं विभाति என்ற சுருதியும் 'भानुमण्डलमध्यस्था' என்ற லலிதாஸஹஸ்ரநாமாவும் நோக்குக.

मुग्धे मुग्धशशाङ्कशेखरयुते मूलागमार्थोदये
मुक्ते मूषिकवाहनार्चितपदे मूर्तित्रयाराधिते ।
मूलाधारगते मुखाब्जविलसन्मुग्धस्मिते मुक्तिदे
मुद्रामोदितमानसे मुनिनुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ ४२ ॥

முக்₃தே₄ முக்₃த₄ஶஶாங்கஶேக₂ரயுதே மூலாக₃மார்தோ₂த₃யே
முக்தே மூஷிகவாஹனார்சிதபதே₃ மூர்த்தித்ரயாராதி₄தே ।
மூலாதா₄ரக₃தே முகா₂ப்₃ஜவிலஸன்முக்₃த₄ஸ்மிதே முக்திதே₃
முத்₃ராமோதி₃தமானஸே முனினுதே வந்தே₃ऽகி₂லாண்டே₃-
ஶ்வரி ॥ 43 ॥

मुग्धे முக்தாவஸ்தையிலிருப்பவளே (அழகுள்ளவளே) **मुग्धशशाङ्कशेखरयुते** மயங்கிய சந்திரசேகரனோடு கூடியவளே **मूलागमार्थोदये** மூலாகமத்தின் பொருள் தோற்றமே **मुक्ते** விடுபட்டவளே **मूषिकवाहनार्चितपदे** விநாயகரால் பூஜிக்கப்பட்ட திருவடியையுடையவளே **मूर्तित्रयाराधिते** பிரும்ம விஷ்ணு ருத்ரர்களால் பூஜிக்கப்பட்டவளே (மூன்று உருவங்களாகப் பூஜிக்கப்பட்டவளும்) **मूलाधारगते** மூலாதாரத்திலிருப்பவளே **मुखाब्जविलसन्मुग्धस्मिते** தாமரை போன்ற முகத்தில் விளங்கு மழகிய மந்தஹாஸத்தோடு கூடியவளே **मुक्तिदे** மோக்ஷத்தை யளிப்பவளே **मुद्रामोदितमानसे** முத்திரைகளால் சந்தோஷப்படுத்தப்பட்ட மனமுள்ளவளே (दशमुद्रासमाराध्या) **मुनिनुते** ரிஷிகளால் துதிக்கப்பட்டவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கிறேன்.

பொழிப்புரை:—முக்தா நாயிகை நிலையிலுள்ளவளும் (அழகியும்) தன் அழகில் மயங்கிய சந்திரசேகாருடன் கூடியவளும், மூலாகமத்தின் பொருளாகத் தோன்றியவளும், விடுபட்டவளும், விநாயகரால் பூஜிக்கப்படும் திருவடியாளும், பிரம்ம விஷ்ணு ருத்ரர்களால் பூஜிக்கப்பட்டவளும், கூடத்ரய ரூபமாக பூஜிக்கப்பட்டவளும், மூலாதாரத்தில் இருப்பவளும், தாமரை போன்ற முகத்தில் விளங்கும் அழகிய புன்முறுவலுடையவளும், மோக்ஷத்தை யளிப்பவளும், முத்ரைகளால் மனமகிழ்ச்சி யடையவளும், ரிஷிகளால் துதிக்கப்பட்டவளுமாகிய அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

குறிப்பு:—வாக்பவகூடம், காமராஜகூடம், சக்திகூடம் ஆகிய மூன்று பகுதிகளில் கொண்ட பஞ்சதசிரூபமாக உபாஸிக்கப் பட்டவள். மூன்று கூடங்களும் பரதேவதையின் முகம், கழுத்து முதல் இடுப்பு வரையில் உள்ள பாகம், இடுப்புக்குக் கீழ்ப்பாகம் இவைகளை முறையே குறிக்கின்றன.

"श्रीमद्वाग्भवकूटैकस्वरूपमुखपङ्कजा ।
कण्ठाधःकटिपर्यन्तमध्यकूटस्वरूपिणी ॥
शक्तिकूटैकतापन्नकट्यधोभागधारिणी ।
मूलमन्त्रात्मिका मूलकूटत्रयकलेबरा ॥"

ஆகிய லலிதா ஸஹஸ்ரநாமத்தில் காணப்படும் பெயர்கள் பிரமாணம்."

यज्ञे यज्ञफलप्रदे यमनुते यज्ञेश्वराराधिते
यक्ष्मघ्ने यमसूदनप्रियतमे यज्ञेशसंपूजिते ।
यन्त्रस्थे यतिपूजिते यतिकृतश्रीचक्रभूषोज्ज्वले
यक्षिण्यादिसमस्तशक्तिविनुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ ४४ ॥

* யஜ்ஞே யஜ்ஞபலப்ரதே யமநுதே
யக்ஷேச்வராராதிதே
யக்ஷ்மக்னே யமஸூதனப்ரியதமே
யஜ்ஞேசஸம்பூஜிதே |
யந்த்ரஸ்தே யதிபூஜிதே
யதிக்ருதஸ்ரீசக்ரபூஷோஜ்ஜ்வலே
யக்ஷிண்யாதிஸமஸ்தசக்திவிநுதே
வந்தேऽகிலாண்டேச்வரி || 44 ||

यज्ञे யஜ்ஞரூபிணி **यज्ञफलप्रदे** யஜ்ஞத்தின் பயனை யளிப்பவளே **यमनुते** யமனால் துதிக்கப்பட்டவளே **यक्षेश्वराराधिते** குபேரனால் பூஜிக்கப்பட்டவளே **यक्ष्मघ्ने** யக்ஷ்மரோகத்தைப் போக்குபவளே **यमसूदनप्रियतमे** யமனை யழித்தவரின் காதலியே **यज्ञेशसंपूजिते** விஷ்ணுவால் பூஜிக்கப்பட்டவளே **यन्त्रस्थे** ஸ்ரீ சக்ரம் முதலிய யந்த்ரங்களிலிருப்பவளே **यतिपूजिते** ஸந்யாஸிகளால் பூஜிக்கப்பட்டவளே **यतिकृत-श्रीचक्रभूषोज्ज्वले** ஸந்யாஸிகளான ஆசார்யாளால் செய்யப்பட்ட ஸ்ரீ சக்ரரூபமான தாடங்கமென்ற ஆபரணத்தால் விளங்குபவளே **यक्षिण्यादिसमस्तशक्तिविनुते** யக்ஷிணீ முதலிய எல்லா சக்திகளாலும் துதிக்கப்பட்டவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

---

* இந்த ஸ்லோகத்தை ஆராய்வோருக்கு ஆதி பகவத் பாதர்களாலேயே இந்நூல் இயற்றப்பட்டதானு என்று ஐயம் தோன்றுவது இயல்பு; ஆயினும்,

"कामं दुग्धे विप्रकर्षत्यलक्ष्मीं कीर्तिं सूते दुर्हृदो निष्प्रहन्ति ।
शुद्धां शान्तां मातरं मङ्गलानां धेनुं धीराः सूनृतां वाचमाहुः ॥"

என்று பவபூதி வசனப்படி, அவர்கள் பரம்பரையில் வந்த ஓர் பெரியோரால் இயற்றப்பட்டிருப்பினும், ஆதி குருவினுடையதாகவே போற்றத்தக்கது.

பொழிப்புரை :—யாக ரூபிணியும், யாகத்தின் பயனை அளிப்பவளும், யமனால் துதிக்கப்பட்டவளும், குபேரனால் பூஜிக்கப்பட்டவளும், யக்ஷ்மரோகத்தைப் போக்குபவளும், யமனை அழித்தவரின் காதலியும், விஷ்ணுவால் மதிக்கப் பட்டவளும், ஸ்ரீ சக்ரம் முதலிய யந்திரங்களிலிருப்ப வளும், ஸந்யாஸிகளால் பூசிக்கப்பட்ட, ஸந்யாஸிகளான ஆசார்யர்வர்களால் செய்யப்பட்ட ஸ்ரீ சக்ர ரூபமான தாடங்கமென்ற கர்ணாபரணத்தால் விளங்குபவளும், யக்ஷிணீ முதலிய ஸகல சக்திகளாலும் துதிக்கப்பட்ட வளும் ஆகிய அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

குறிப்பு:—இந்த 44-வது ஶ்லோகத்தில் **यतिकृतश्रीचक्रभूषो-ज्ज्वले** என்று கூறியதால் முக்திய 43 ஶ்லோக படனமும் ஸ்ரீ சக்ர பூஜைக்கு ஸமமென்பது விளங்கும்.

रामे रामवरप्रदे रसकले राजीवपत्रार्चिते
राकाचन्द्रनिभे रमार्चितपदे राजाधिराजानते ।
रम्ये राजतशैलशृङ्गनिलये रत्यासपत्यानुते
रागद्वेषविहीनचित्तसुलभे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ४५ ॥

ராமே ராமவரப்ரதே ரஸகலே ராஜீவபத்ரார்சிதே
ராகாசந்த்ரநிபே ரமார்சிதபதே ராஜாதிராஜாநதே ।
ரம்யே ராஜதசைலஶ்ருங்கநிலயே ரத்யாஸபத்யாநுதே
ராகத்வேஷவிஹீநசித்தஸுலபே வந்தேऽகிலாண்-
[டேஶ்வரி ॥ 45 ॥

रामे அழகியவளே **रामवरप्रदे** ராமனுக்கு வரமளிப்ப வளே **रसकले** ரஸகலையாக இருப்பவளே **राजीवपत्रार्चिते** தாமரை இதழ்களால் பூஜிக்கப்பட்டவளே **राकाचन्द्रनिभे**

பூர்ணிமை சந்திரனுக்கு ஒப்பானவளே **रमार्चितपदे** லக்ஷ்மியால் பூஜிக்கப்பட்டதிருவடியையுடையவளே **राजाधिपजानते** குபேரனால் (சக்ரவர்த்திகளால்) வணங்கப்பட்டவளே **रम्ये** மனதைக்கவருபவளே **राजतशैलशृङ्गनिलये** (வெள்ளிமலை) கைலாஸ சிகரத்தை இருப்பிடமாகக்கொண்டவளே **रत्यास-पत्या नुते** சிவனால் எரிக்கப்பட்டு பிறகு ரதியால் அடையப்பட்டபுருஷனாகிய மன்மதனால் துதிக்கப்பட்டவளே **रागद्वेष विहीनचित्तसुलभे** ராகம் த்வேஷம் இல்லாத சித்தமுடையவர்களால் எளிதில் அடையத் தகுந்தவளே அகிலாண்டேச்வரி வணங்குகிறேன்.

பொழிப்புரை:— அழகியும், ராமனுக்கு வரமளித்தவளும், ரஸகலையாக விளங்குபவளும், தாமரை மிதழ்களால் பூஜிக்கப்பட்டவளும், நிறைமதி போல்வாளும், லக்ஷ்மியால் பூஜிக்கப்பட்ட திருவடியினளும், குபேரனால் (சக்ரவர்த்திகளால்) வணங்கப்பட்டவளும், மனதைக் கவருபவளும், கைலாஸ சிகரத்தை யிருப்பிடமாகக் கொண்டவளும், சிவனால் எரிக்கப்பட்டு பிறகு ரதி யடைந்த மன்மதனால் துதிக்கப்பட்டவளும், மனதில் ராகத்வேஷ மில்லாதவர்களால் எளிதில் அடையத் தகுந்தவளுமான அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

குறிப்பு:— हरनेत्राग्निसन्दग्धकामसञ्जीवनौषधिः என்பது லலிதா ஸஹஸ்ரநாமம்.

"परिणेष्यति पार्वतीं यदा तपसा तत्प्रवणीकृतो हरः ।
उपलब्धसुखस्तदा स्मरं वपुषा स्वेन नियोजयिष्यति ॥"

என்ற குமாரஸம்பவச் செய்யுளையும் கவனிக்க.

लावण्याम्बुनिधे ललाटनयने लम्बोदराराधिते
लाक्षारञ्जितपादपद्मयुगले लम्बालकोल्लासिते ।

लङ्केशारिनुते लयोद्भवकरे लक्ष्मीपतीड्यप्रिये
लक्ष्यालक्ष्यमनोज्ञमध्यलतिके वन्देऽखिलाण्डेश्वरि ॥ ४६ ॥

லாவண்யாம்புநிதே லலாடநயநே லம்போதராராதிதே
லாக்ஷாரஞ்ஜிதபாதபத்மயுகலே லம்பாலகோத்பாஸிதே
லங்கேசாரிநுதே லயோத்பவகரே லக்ஷ்மீபதீட்யப்ரியே
லக்ஷ்யாலக்ஷ்யமநோஜ்ஞமத்யலதிகே வந்தேऽகிலாண்
[டேச்வரி || 46 ||

लावण्याम्बुनिधे லாவண்யத்திற்கு (அழகிற்கு)க் கடலே **ललाटनयने** நெற்றிக்கண்ணுள்ளவளே **लम्बोदराराधिते** கணேசனால் பூஜிக்கப்பட்டவளே **लाक्षारञ्जितपादपद्मयुगले** செம்பஞ்சுக் குழம்பால் அழகிய இருதிருவடித் தாமரையையுடையவளே **लम्बालकोद्भासिते** தொங்குகின்ற சுருண்ட முன் நெற்றி மயிர்களால் விளங்குபவளே **लङ्केशारिनुते** ராமனால் துதிக்கப்பட்டவளே **लयोद्भवकरे** உலகத்திற்கு அழிவையும் பிறப்பையும் செய்கிறவளே (**लयाम्बुललिते** ப்ரளய ஜலத்தில் விளையாடுபவளே) **लक्ष्मीपतीड्यप्रिये** விஷ்ணுவால் துதிக்கத்தக்க ஈசனது மனைவியே **लक्ष्यालक्ष्यमनोज्ञमध्यलतिके** தெரிந்தும் தெரியாததுமான அழகிய மெல்லிய இடையுள்ளவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—அழகுக்குக் கடலும், நுதல் விழியால் விளங்குபவளும், கணேசனால் பூசிக்கப்பட்டவளும், செம்பஞ்சுக் குழம்பு பூசிய திருவடித் தாமரையினளும், தொங்கும் சுருண்ட முன் நெற்றி மயிர்களால் ஒளிர்பவளும், ராமனால் துதிக்கப்பட்டவளும் உலகிற்கு அழிவையும் தோற்றத்தையும் செய்வாளும் (பிரளய ஜலத்தில் விளையாடுபவளும்), விஷ்ணுவால் துதிக்கத்தகும் அரனார்காதலியும்,

தெரிந்தும் தெரியாததுமான அழகிய மெல்லிய இடையாளுமாகிய அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

குறிப்பு:—उन्मेषनिमिषोत्पन्नविपन्नभुवनावलिः ।

वाच्ये(वामे) वारिजलोचनार्चितपदे वाग्देवताराधिते
वामाद्ये वरशैलराजतनये वामादिशक्त्यात्मिके ।
वश्याकर्षणसिद्धिमूलगुलिके वादित्रनादप्रिये
वाणीवल्लभवज्रपाणिवरदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ४७ ॥

வாச்யே (வாமே) வாரிஜலோசனார்சிதபதே
வாக்தேவதாராதிதே
வாமாத்யே வரசைலராஜதனயே
வாமாதிசக்த்யாத்மிகே ।
வச்யாகர்ஷணஸித்திமூலகுலிகே
வாதித்ரநாதப்ரியே
வாணீவல்லபவஜ்ரபாணிவரதே
வந்தேऽகிலாண்டேச்வரி ॥ 47 ॥

वाच्ये வேதத்தால் அறியப்படுகிறவளே (**वामे** அழகுள்ளவளே) **वारिजलोचनार्चितपदे** தாமரைக் கண்ணிகளான ஸுவாஸினிகளால் பூஜிக்கப்பட்ட திருவடியையுடையவளே **वाग्देवताराधिते** ஸரஸ்வதியால் பூஜிக்கப்பட்டவளே **वामाद्ये** வாமா தேவிக்கு முதல்வளே **वरशैलराजतनये** சிறந்த மலையரசன் மகளே **वामादिशक्त्यात्मिके** வாமா முதலிய சக்திஸ்வரூபிணி **वश्याकर्षणसिद्धिमूलगुलिके** வசிய, ஆகர்ஷண, ஸித்தி இவைகளுக்கு அல்லது வச்யம், ஆகர்ஷணம், அணிமாதி ஸித்திகளுக்குக்காரணமான மாத்திரையே **वादित्रनादप्रिये** வாத்ய கோஷத்தில் பிரியமுள்ளவளே

वाणीवल्लभवज्रपाणिवरदे பிரமன், இந்திரன் இவர்களுக்கு வரமளிப்பவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :—வேதத்தால் அறியப்படுவாளும் (அழகுள்ளவளும்), ஸகலப் பொருள்களாக விளங்குபவளும், தாமரைக் கண்ணிகளான ஸுமங்கலிகளால் பூஜிக்கப்பட்ட திருவடியாளும், ஸரஸ்வதியால் இறைஞ்சப்பட்டவளும், வாமாதேவிக்கு முதல்வளும், சிரிய மலையரசன் மகளும் வாமா முதலிய சக்தி ரூபிணியும், வச்யம், ஆகர்ஷணம், அணிமாதி ஸித்திகள் இவைகளுக்கு காரணமான மாத்திரையானவளும் வாத்ய கோஷத்தில் பிரியமுடையவளும், பிரமன் இந்திரன் ஆகியோருக்கு வரமளிப்பவளுமாகிய அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

குறிப்பு :—பிரமன், இந்திரன் ஆகியவர்களுக்கு வரமளித்த விஷயம் திருவானைக்கா புராணம் கண்டு தெளிக.

शान्ते शङ्करवल्लभे शशियुते शातोदरि श्यामले
शङ्काहीनविशोकदे शतमखाराध्ये शशाङ्कानने ।
शक्ते शक्तिधरार्चिते शमधनाधीशार्चिते शारदे
शैवाद्यागमपारगे शमधने वन्देऽखिलाण्डेश्वरि ॥ ४८ ॥

ஶாந்தே ஶங்கரவல்லபே ஶஶியுதே
ஶாதோதரி ஶ்யாமலே
ஶங்காஹீநவிஶோகதே
ஶதமகாராத்யே ஶஶாங்காநநே ।
ஶக்தே ஶக்திதரார்சிதே
ஶமதநாதீஶார்சிதே ஶாரதே
ஶைவாத்யாகமபாரகே ஶமதநே
வந்தேऽகிலாண்டேஶ்வரி ॥ 48 ॥

शान्ते சாந்திரூபிணி **शङ्करवल्लभे** சங்கரனை ஸ்வாதீனப் படுத்தியவளே **शशियुते** சந்திரனோடு கூடியவளே **शातोदरि** வாடிய வயிறுள்ளவளே **श्यामले** ச்யாமலா தேவியே **शङ्काहीनविशोकदे** 'यस्य स्यादद्धा' என்ற நியாயப்படி சந்தேகமில்லாதவர்களுக்கு மோக்ஷானந்த மளிப்பவளே **शतमखाराध्ये** இந்திரனால் பூஜிக்கத்தகுந்தவளே **शशाङ्कानने** சந்திரன்போன்ற முகமுள்ளவளே **शक्ते** சக்தியே **शक्तिधरार्चिते** சுப்ரமண்யரால் பூஜிக்கப்பட்டவளே **शमधनाधीशार्चिते** ரிஷீச்வரரான அகஸ்தியரால் பூஜிக்கப்பட்டவளே **शारदे** ஸரஸ்வதியே **शैवाद्यागमपारगे** சைவம் முதலிய ஆகமங்களின் அப்பால் விளங்குபவளே **शमधने** சாந்தியைப் பொருளாகக் கொண்டவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை :—சாந்தி ஸ்வரூபிணியும், சங்கரனை ஸ்வாதீனப்படுத்தியவளும், சந்திரனோடு கூடியவளும், வாடிய வயிறுள்ளவளும், ச்யாமலாதேவியும், சந்தேகமில்லாதவர்க்கு மோக்ஷானந்த மளிப்பவளும், இந்திரனால் பூஜிக்கத்தக்கவளும், சந்திரன் போன்ற முகமுள்ளவளும், சக்தியும், சுப்ரஹ்மண்யரால் பூஜிக்கப்பட்டவளும், ஸரஸ்வதியும், சைவம் முதலிய ஆகமங்களுக் கப்பாற்பட்டவளும், சாந்தியைப் பொருளாகக் கொண்டவளுமாகிய அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

குறிப்பு :—**यस्य स्यादद्धा** என்ற நியாயப்படி ஸந்தேகமில்லாத நிச்சய புத்தியுள்ளவர்க்கே மோக்ஷானந்தம் கைகூடும். **संशयात्मा विनश्यति** என்பதும் நோக்குக. மநு, சந்திரன், குபேரன், லோபாமுத்ரை, மன்மதன், அகஸ்தியர், அக்னி, ஸூர்யன், இந்திரன், ஸ்கந்தன், சிவன், துர்வாஸஸ் ஆகிய பன்னிரு உபாஸக ச்ரேஷ்டர்களாலும் பரதேவதை உபாஸிக்கப் பட்ட விஷயம் இந்நூலில் ஆங்காங்கு கூறப்படுகிறது.

षट्चक्रान्तगते षडक्षरमये षट्त्रिंशतत्त्वात्मिके
षट्पद्मान्तपुरे षडाननुते षट्कोणसंभाविते ।
षड्वक्त्रद्विपवक्त्ररामवरदे षड्ग्रन्थिवन्द्यात्मिके
षट्शक्तिप्रभवात्मनः प्रियतमे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ४९ ॥

ஷட்சக்ராந்தகதே ஷடக்ஷரமயே
ஷட்த்ரிம்ஶதத்வாத்மிகே
ஷட்பத்மாந்தபுரே ஷடானநநுதே
ஷட்கோணஸம்பாவிதே |
ஷட்வக்த்ரத்விபவக்த்ரராமவரதே
ஷட்க்ரந்திவந்த்யாத்மிகே
ஷட்ஶக்திப்ரபவாத்மந: ப்ரியதமே
வந்தேऽகிலாண்டேஶ்வரி || 49 ||

षट्चक्रान्तगते மூலாதாரம் முதலிய ஆறுசக்ரங்களின் மத்தியிலிருப்பவளே **षडक्षरमये** (யாஜ்யானபடியால்) ஆறு அக்ஷரஸ்வரூபிணி **षट्त्रिंशतत्त्वात्मिके** முப்பத்தாறு தத்வ ரூபிணி முப்பத்தாறுவது தத்வத்திற்கு மேலான ஸாதாக்ய தத்வமாக விளங்குபவளே **षट्पद्मान्तपुरे** ஆறு ஆதார பத்மங்களின் முடிவில் ஸஹஸ்ராரத்தை பட்டணமாகக் கொண்டவளே **षडाननुते** ஸுப்ரமண்யரால் துதிக்கப்பட்டவளே **षट्कोणसंभाविते** ஷட்கோண சக்ரத்தில் தோன்றுபவளே **षड्वक्त्र द्विपवक्त्र राम वरदे** ஆறுமுகன், யானை முகன், ராமன் இவர்களுக்கு வரமளித்தவளே **षड्ग्रन्थिवन्द्यात्मिके** ஆறு க்ரந்திகள் என்ற ஆறு சக்ரங்களில் வணங்கத்தகுந்த ஸ்வரூபமுள்ளவளே **षट्शक्तिप्रभवात्मनः** ஸர்வஜ்ஞதை, திருப்தி முதலிய ஆறு சக்திகளுள்ள சிவனுக்கு **प्रियतमे** காதலியே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—மூலாதாரம் முதலிய ஆறு சக்ரங்களின் நடுவில் விளங்குபவளும், ஆறு அக்ஷரம் கொண்ட பரஸா ரூபிணியும், முப்பத்தாறு தத்வமாக விளங்குபவளும் ஆறு தாமரைகளுக்கு முடிவிலுள்ள ஸஹஸ்ராரத்தைப் பட்டணமாகக் கொண்டவளும், ஸுப்ரஹ்மண்யரால் துதிக்கப்பட்டவளும், ஷட்கோண சக்ரத்தில் தோன்றியவளும், ஆறுமுகன், யானைமுகன், ராமன் இவர்களுக்கு வரமளித்தவளும், (மூன்று) கிரந்திகளுடன் கூடிய ஆறு சக்ரங்களில் வணங்கத் தகுந்த ஸ்வரூபமுள்ளவளும், ஆறு சக்திகளுள்ள சிவனது காதலியும் ஆன அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

குறிப்பு:—(1) மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை என்பன ஆறுசக்ரங்கள். (2) सर्वज्ञता तृप्तिः, अनादिबोधः स्वतन्त्रता, नित्यमलुप्तशक्तिः, अनन्तशक्ति என்று ஆறு சக்திகளாம்.

सर्वाभीष्टफलप्रदे सुमतिभिः संसेविते सात्त्विकैः
सर्वालङ्करणे सदाशिवमये सम्पत्करे साक्षिणि ।
सादिस्थे सरसीरुहाक्षियुगले सङ्घट्टवक्षोरुहे
साक्षात्कारिणि सर्वलोकवरदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ५० ॥

ஸர்வாபீஷ்டபலப்ரதே ஸுமதிபி:
ஸம்ஸேவிதே ஸாத்விகை:
ஸர்வாலங்கரணே ஸதாசிவமயே
ஸம்பத்கரே ஸாக்ஷிணி ।
ஸாதிஸ்தே ஸரஸீருஹாக்ஷியுகலே
ஸங்கட்டவக்ஷோருஹே
ஸாக்ஷாத்காரிணி ஸர்வலோகவரதே
வந்தேऽகிலாண்டேச்வரி ॥ 50 ॥

सर्वाभीष्टफलप्रदे எல்லோருக்கும் விரும்பிய பலனை யளிப்பவளே **सुमतिभिः** சிறந்த புத்தியுள்ள **सात्त्विकैः** ஸத்வ குணம் மேலிட்டவர்களால் **संसेविते** ஸேவிக்கப்பட்டவளே (**सात्त्विके** ஸத்வகுண ரூபிணி) **सर्वालङ्कृते** ஸர்வனாகிய கடவுளுக்கு அலங்காரமாக விளங்குபவளே (அல்லது எல்லா அலங்காரமும் உள்ளவளே) **सदाशिवमये** ஸதா சிவஸ்வ ரூபிணி) **सम्पत्करे** செல்வத்தைத் தருபவளே (சம்பத்கரி அம்பாரூபிணி) **साक्षिणि** ஸாக்ஷியாக விளங்குபவளே **सादिस्थे** ஸாதிவித்யையிலிருப்பவளே **सरसीरुहाक्षियुगले** கருந்தாமரை போன்ற இரண்டு கண்களையுடையவளே **संघट्टवक्षोरुहे** ஒன்றோடொன்று மோதுகின்ற (நெருங்கிய) ஸ்தனங்களை யுடையவளே **साक्षात्कारिणि** எல்லாவற்றையும் நேரில் காண்பவளே **सर्वलोकवरदे** எல்லா உலகையும் வரயாக அளிப்பவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—எல்லோருக்கும் விருப்பிய பயனை அளிப்பவளும், சிறந்த புத்தியுள்ள ஸத்வகுணம் மேலிட்டவர்களால் ஸேவிக்கப்பட்டவளும், எல்லாமாய கடவுளுக்கு அலங்காரமாக விளங்குபவளும்; (எல்லா அலங்காரமும் உள்ளவளும்) ஸதாசிவ ரூபிணியும், செல்வத்தைத் தருபவளும், ஸாக்ஷியாக விளங்குபவளும், ஸாதிவித்யையில் இருப்பவளும், கருந்தாமரை போன்ற கண்களுள்ளவளும், ஒன்றோடொன்று மோதுகின்ற கொங்கைகளுள்ளவளும், எல்லாவற்றையும் நேரில் காண்பவளும், (எல்லா ஜனங்களுக்கும் வரமளிப்பவளும்), எல்லா உலகையும் வரமாக அளிப்பவளுமான அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

हाहाकाररवैस्त्रिभिः स्तुतपदे हाराभिरामेऽसमे
हंसोल्लासितरम्यविश्वविभवे हंबीजमूलाङ्कुरे ।
हस्थे हस्तिवनालये हरिहरब्रह्मेन्द्रवन्द्येश्वरि
हंसातीतपदे हकारचरिते वन्देऽखिलाण्डेश्वरि ॥ ५१ ॥

ஹாஹாகாரரவைஸ்த்ரிபிஸ்துதபதே
    ஹாராபிராமேZஸமே
ஹம்ஸோல்லாஸிதரம்யவிஸ்வவிபவே
    ஹம்பீஜமூலாங்குரே ।
ஹஸ்தே ஹஸ்திவநாலயே
    ஹரிஹரப்ரஹ்மேந்த்ரவந்த்யேஸ்வரி
ஹம்ஸாதீதபதே ஹகாரசரிதே
    வந்தேZகிலாண்டேஸ்வரி ॥ 51 ॥

त्रिभिः மூன்று **हाहाकाररवैः** ஹா, ஹா, ஹா, என்றத்வனிகளால் **स्तुतपदे** துதிக்கப்பட்ட ஸ்தானத்தையுடையவளே (பிரும்ம ஸாக்ஷாத்காரிகள் ஸாமகானம் செய்துகொண்டிருப்பார்கள்) **हाराभिरामे** ஹாரங்களால் அழகியவளே **असमे** ஒப்பற்றவளே **हंसोल्लासितरम्यविश्वविभवे** हं, सः என்ற மூலாக்ஷரங்களில் விளங்கும் அழகிய உலகமென்ற சொத்தையுடையவளே **हंबीजमूलाङ्कुरे** ஹம்பீஜத்தை மூலாங்குரமாகக் கொண்டவளே **हस्थे** ஹகாரத்தில் இருப்பவளே **हस्तिवनालये** கஜாரண்யத்தை இருப்பிடமாகக் கொண்டவளே **हरिहरब्रह्मेन्द्रवन्द्येश्वरि** விஷ்ணு, சிவன், பிரமன், இந்திரர்களால் வணங்கத் தகுந்த யஜமானியே (**हंसे** ஹம்ஸ காயத்ரீரூபிணி) **हंसातीतपदे** ஹம், ஸ: என்ற மந்திராக்ஷரங்களுக்குமேல் நிலையிலுள்ளவளே (**अतीतपदे** எல்லாவற்றிற்கும் மேலான நிலையுள்ளவளே) **हकारचरिते** (தஹராகாசத்தில்

ஹகாரத்தில் உலாவுகின்றவளே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—ஹா, ஹா, ஹா என்ற மூவொலிகளால் துதிக்கப்படும் நிலையுடையாளும், ஹாரங்களால் அழகுற்று ஒப்பற்றவளும், ஹம்ஸ: என்ற மூலாக்ஷரங்களில் விளங்கும் அழகிய உலகமென்ற சொத்தையுடையவளும், ஹம்பீஜத்தை மூலாங்குரமாகக் கொண்டவளும், ஹகாரத்தில் இருப்பவளும், கஜாரண்யத்தை உறைவிடமாகக் கொண்டவளும், விஷ்ணு, சிவன், பிரமன் இந்திரர்களால் வணங்கத்தக்க தலைவியும் (ஹம்ஸ காயத்ரீ ரூபிணியும், எல்லாவற்றிற்கும் மேலான நிலையிலுள்ளவளும்) ஹம்ஸ: என்ற மந்திராக்ஷரத்திற்குமேல் நிலையிலுள்ளவளும், ஹகாரத்தில் (ககராகாசத்தில்) உலவுகின்றவளுமான அகிலாண்ட நாயகியை வணங்குகிறேன்.

ळंबीजे ळकुळे ळतामृदुतनो ळंकारसंपूजिते
ळंबीजेन सुलक्षितेऽव्ययविभवे क्लींकाररूपान्विते ।
ळान्ते हन्त गरे जवात्समुदिते त्रस्तान्सुरान्वीक्ष्य तत्
ळान्ते मे विनियच्छदीशमहिळे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ५२ ॥

ளம்பீஜே ளகுளே ளதாம்ருதுதநோ
ளங்காரஸம்பூஜிதே
ளம்பீஜேந ஸுலக்ஷிதேவ்யயவிபவே
க்லீங்காரரூபான்விதே |
ளாந்தே ஹந்த கரே ஜவாத்ஸமுதிதே
த்ரஸ்தான் ஸுரான் வீக்ஷ்ய தத்
ளாந்தே மே விநியச்சதீசமஹிளே
வந்தேऽகிலாண்டேச்வரி || 52 ||

ळबीजे ளம்பீஜாக்ஷரத்தையுடையவளே **ळकुळे** ளகு ளேச்வரி **ळतामृदुतनो** கொடிபோல் மெல்லிய தேஹம் வாய்ந்தவளே **ळंकारसंपूजिते** ளம் என்ற எழுத்தில் பூஜிக்கப் பட்டவளே **ळंबीजेन** ளம் பீஜத்தால் **सुलक्षितेड्यविभवे** நன் கறியப்படும் போற்றத்தகுந்த பெருமையுள்ளவளே **क्लींकाररूपान्विते** க்லீம்கார ஸ்வரூபத்தோடு கூடியவளே **ळान्ते गरे (गरले)** விஷமானது **जवात्** வேகமாக **समुदिते** கிளம்பியதும் **हन्त !** அந்தோ **त्रस्तान्** நடுங்கிய **सुरान्** தேவர்களை **वीक्ष्य** பார்த்து **तत्** அதை **ळान्ते गे(गले)** கழுத்தில் **विनियच्छदीशमहिळे** அடக்கிக்கொண்ட பரமசிவனது மனைவியே அகிலாண்டேச்வரி நமஸ்கரிக்கின்றேன்.

பொழிப்புரை:—ளம் பீஜாக்ஷரத்தை யுடையவளும், ளகுளே ஈஸ்வரியும், கொடிபோல்மெல்லிய மேனியளும், ளம் என்ற எழுத்தில் பூஜிக்கப்பட்டவளும், ளம் பீஜத்தால் நன் கறியப்பட்டு போற்றத் தகுந்த பெருமை யுடையவளும், க்லீம்கார ஸ்வரூபத்தோடு கூடியவளும், விஷமானது வேகமாக கிளம்பியதும் அந்தோ! நடுங்கிய தேவர்களைப்பார்த்து அதை கழுத்தில் அடக்கிய பரமசிவன் மனைவியுமான அகிலாண்டேச்வரியை வணங்குகிறேன்.

क्षोणीशाग्रयपदैकलक्षणविधिक्षेपप्रमाणेक्षणे
क्षिप्रादक्षिणकुक्षिशिक्षणमनःक्षेत्रज्ञसंरक्षिणि ।
यक्षालक्ष्यतितिक्षुदक्षदमनक्षान्तान्तसंवीक्षणे
क्षन्तव्यं क्षितिभृत्सुते स्तुतिवचः क्षुद्रं मदीयं शिवे ॥ ५३ ॥

க்ஷோணீஶாத்ர்யபதைகலக்ஷண
விதிக்ஷேபப்ரமாணேக்ஷணே
க்ஷிப்ராதக்ஷிணகுக்ஷிஶிக்ஷணமந:
க்ஷேத்ரஜ்ஞஸம்ரக்ஷிணி |
த்ர்யக்ஷாலக்ஷ்யதிதிக்ஷுதக்ஷதமந
க்ஷாந்தாந்தஸம்வீக்ஷணே
க்ஷந்தவ்யம் க்ஷிதிப்ருத்ஸுதே ஸ்துதிவச:
க்ஷுத்ரம் மதீயம் ஶிவே || 53 ||

क्षोणीशात्र्यपदैकलक्षणविधिक्षेपप्रमाणेक्षणे | சக்ரவர்த்தி ஸ்தானத்திற்கு இன்றியமையாத லக்ஷணமாகிய விதி நிந்தைகளுக் காதாரமான பார்வையை யுடையவளே (விதி நிஷேதங்களுக்கு பிரமாணமான வேதத்தில் நோக்கமுள்ளவளே) क्षिप्रादक्षिणकुक्षिशिक्षणमनःक्षेत्रज्ञसंरक्षिणि அவசரமுள்ளவனும் வாமார்க்கோபாஸகனுமான பலிசக்ரவர்த்தியைச் சிக்ஷிக்க மனம் கொண்ட க்ஷேத்ராஜ்ஞனை விஷ்ணுவைப் பாதுகாப்பவளே त्र्यक्षालक्ष्यतितिक्षुदक्षदमनक्षान्तान्तसं-वीक्षणे முக்கண்ணனைக் கவனியாத பொறுமையில்லாத தக்ஷனை யடக்கியவரின் பொறுமையைக் கொண்ட கடைக்கண் பார்வையுள்ளவளே क्षितिभृत्सुते மலைமகளே शिवे மங்களரூபிணி பார்வதி मदीयं எனது क्षुद्रं அல்பமான स्तुतिवचः ஸ்தோத்திரச் சொல் क्षन्तव्यम् பொறுத்துக் கொள்ளத் தகுந்தது.

பொழிப்புரை:—சக்ரவர்த்தி ஸ்தானத்திற்கு இன்றியமையாத லக்ஷணமாகிய விதி நிந்தைகளுக்கு ஆதாரமான பார்வை உள்ளவளும்; (விதி நிஷேதங்களுக்கு பிரமாண மான வேதத்தில் நோக்கமுள்ளவளும்) அவஸரமுள்ளவனும் வாம மார்க்கோபாஸகனுமான பலி சக்ரவர்த்தியைச்

சிக்ஷிக்க மனங்கொண்ட க்ஷேத்ரஞ்ஞன் விஷ்ணுவைப் பாதுகாப்பவளும், முக்கண்ணனைப் புறக்கணித்துப் பொறுமை யிழந்த தக்ஷனை அடக்கியவரின் பொறுமை பொருந்திய கடைக்கண் நோக்கினளும், (தக்ஷனை வெகுண்ட சிவனுக்கு பொறுமை யளிப்பவளும்) கலைமகளும், மங்களரூபிணியுமான பார்வதி எனது அற்பமான இந்த இறைஞ்சல் மொழியை பொறுத்தருள்வாளாக.

*इति गिरिवरपुत्रीपादराजीवभूषा
भुवनममलयन्ती सूक्तिसौरभ्यसारैः ।
शिवपदमकरन्दस्यन्दिनी मन्निदाना
मदयतु कविभृङ्गान्मातृकापुष्पमाला ॥ ५४ ॥

இதி கிரிவரபுத்ரீபாதராஜீவபூஷா
புவனமமலயந்தீ ஸூக்திஸௌரப்யஸாரை: ।
சிவபதமகரந்தஸ்யந்திநீ மந்நிதாநா
மதயது கவிப்ருங்கான்மாத்ருகாபுஷ்பமாலா.

इति இம்மாதிரி सूक्तिसौरभ्यसारैः சிறந்த மொழிகளாகிற சிறந்த வாசனைகளால் भुवनं உலகை अमलयन्ती பரிசுத்தமாக்குகின்றதும் मन्निदाना என்னைக் காரணமாகக் கொண்டதும் (என்னால் செய்யப்பட்டதும்) गिरिवरपुत्री-पादराजीवभूषा மலைமகளின் தாமரை போன்ற பாதங்களுக்கு அலங்காரமானதும் शिवपदमकरन्दस्यन्दिनी மோக்ஷமென்கிற மகரந்தத்தை (பூத்தேனை)ப் பெருக்குகின்றதுமான मातृकापुष्पमाला (அகாராதி க்ஷாந்த வர்ணங்கள் கொண்ட) மாத்ருகை என்ற பூமாலை कविभृङ्गान् கவிகளாகிற வண்டுகளை मदयतु சந்தோஷப்படுத்தட்டும்.

---

* இந்த ச்லோகம் ஸ்ரீமந்த்ரமாத்ருகாபுஷ்பமாலாஸ்துதியிலுள்ளது

பொழிப்புரை :—இம்மாதிரி சீரிய சொற்களாகும் சிறந்த வாஸனைகளால் உலகைத் தூய்மையாக்குவதும் அடியேனால் ஆக்கப்பட்டதும், மலைமகளின் தாமரைக் கழல்களுக்கு அணியானதும், மோக்ஷமென்னும் பூந்தேனை மொழியா நின்றதுமான அகாரம் முதல் க்ஷகாரம் ஈறாக உள்ள எழுத்துக்கள் கொண்ட மாத்ருகையாலான மலர் மாலை, கவிகளாகும் தும்பிகளைக் களிப்புறச் செய்யட்டும்.

इति परमहंसपरिव्राजकाचार्यभगवत्पाद श्रीशङ्करविरचिता
श्रीमातृकापुष्पमालास्तुतिः ॥

Thompson & Co., Ltd., Madras.

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம:

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் ஸம்ஸ்க்ருத, க்ரந்த மூலமும், த
அனுவாதமும், பல வர்ணப் படங்களுடனும் ஸ்ரீ ஆசார்ய
அனுக்கிரஹ பூர்வமான ஸ்ரீ முகத்துடனும் கூடியது.

		ரூ.	அ.	ஹ
1.	ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ர நாமஸ்தோத்திரம் ...	1	8	0
2.	௸ மூலம் மட்டும் ...	0	2	6
3.	ஸ்ரீ பஜ கோவிந்தம்	0	4	0
4.	ஸ்ரீ முகுந்தமாலை	0	6	0
5.	ஸ்ரீ ப்ரச்னோத்ர ரத்னமாலிகா (தெலுங்கில்) ...	0	2	6
6.	ஸ்ரீ தேவீ ஸ்தோத்ர ரத்னகரம் (ஸ்ரீ ச்யாமளா தண்டகம் முதலிய 12 தேவீ ஸ்தோத்ரங்கள் தமிழ் அர்த்தத்துடன் கூடியது) ...	0	15	0
7.	ஸ்ரீ சீதலாஷ்டகம்	0	2	6
8.	ஸ்ரீ அம்பாஷ்டகம்	0	2	6
9.	ஸ்ரீ ஜம்புநாதாஷ்டகம்	0	2	0
10.	ஸ்ரீ குலீரேசாஷ்டகம்	0	2	0
11.	ஸ்ரீ கீதையும், குறளும்	0	3	0
12.	ஸ்ரீ தயாசதகம்	0	12	0
13.	ஸ்ரீ சிவபாதாதிகேசாந்த ஸ்தோத்திரங்கள் ...	0	12	0
14.	ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்	0	5	0
15.	ஸ்ரீ ரங்கநாதாஷ்டகம்	0	2	0
16.	ஸ்ரீ அத்வைதசித்தாந்த வினவிடை	0	5	0
17.	கும்பகோணம் அத்வைத சபை பொன்விழா நினைவு மாலை—			
	(1) ஸம்ஸ்கிருதம்—51 கட்டுரைகள் அடங்கியது	5	0	0
	(2) ஆங்கிலம் —12 ,, ,, ...	3	0	0
18.		0	10	0
19.	ஸ்ரீ ஆக்யாஷஷ்டி			
23.	திருக்குறள் — பொருட்பாலும், காமத்துப் பாலும்—பாலருரையுடன்	4	0	0
21.	திருக்குறள்—108—உரையுடன்	1	0	0
22.	ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் நன்மொழிகள்			
	(1) நமது வேதங்களும் சாஸ்திரங்களும் ...	1	0	0
	(2) நமது ஆலயங்களும் மூர்த்திகளும் ...	0	12	0
	(3) நமது அநாதி மதம்	0	6	0
	(4) நமது தர்மம்	0	12	0
	(5) நாற்பது ஸம்ஸ்காரங்களும் கர்மானுஷ்டானங்களும்	0	10	0

ஸ்ரீ ஆதிசங்கரர். ஸ்ரீ ஆசார்யாள் அவர்களின்
திவ்விய மூவர்ணப் படங்கள். ஒவ்வொன்றும் விலை அணா

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் தெரு, கும்பகோணம் | 4, பிரான்ஸிஸ் ஜோசப்புத் தெ... சென்னை—1.